
# சைவசமய வழிபாடும் விரதங்களும்



சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

109 , CALEDON ROAD, EAST HAM, LONDON, E 6 2 H D, U.K
வீரமாணிக்க தேவன் துறை, மயிலிட்டி,
யாழ்ப்பாணம்,
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்ணகி அம்மன் வீரமாணிக்க தேவன்துறை ,
மயிலிட்டி, யாழ்ப்பாணம், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





இறையடி சேர்ந்த எனது மாமா வினாசித்தம்பி சோமசுந்தரம், மாமி சோமசுந்தரம் சிவக்கொழுந்து ஆகியவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : சைவ சமய வழிபாடும் விழாக்களும் |
| தொகுப்பாளர் | : சைவசித்தாந்த ரத்தினம்<br>நாகேந்திரம் கருணாநிதி |
| வெளியீட்டாளரும் | : **NAGENTHIRAM-KARUNANITHY** |
| பதிப்பு உரிமையும் | : 109, CALEDON ROAD ,<br>EASTHAM , LONDON E6 2HD,<br>UNITED KINGDOM<br>00 44 208 552 0817<br>00 44 7812784048<br>karusakthy@yahoo.co.uk |
| | : வீரமாணிக்க தேவன் துறை<br>மயிலிட்டி , யாழ்ப்பாணம் , இலங்கை |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| வெளியீட்டு எண் | : 03 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2017 |
| பக்க எண்ணிக்கை | : 92 + viii |
| பயன்படுத்திய தாள் | : 70GSM |
| நூலின் அளவு | : A5 |
| எழுத்தின் அளவு | : 9 புள்ளிகள் |
| அச்சகம் | : JR Printers, London |
| பாடம் | : ஆன்மிகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ கருணாகர விநாயகர் துணை

**வித்யா பூஷணம், குருமணி, சிவாகமரத்தினம்**
**ஜோதிடகணிதர், ஆசிரியர்**

சிவஸ்ரீ. சபா. மகேஸ்வரக்குருக்கள். B. A (Cey)
(பிரதம சிவாச்சாரியார்)
Siva Sri. Saba. Maheswara Kurukkal B.A (Cey)
(Chief Priest)

London Sivan Kovil
4A, Clarendon Rise
Lewisham
London SE13 5ES

Tel: 0208 318 9844 (Temple)
Tel/Fax:0208 850 7704(Resident)
Mob:07891412380
E.mail:maheskurukkal@gmail.com


"அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவாசகத்தில் கூறுவது போல இறைவனது திருவருள் எமக்குக் கிடைக்கும் போது இறைவனை வணங்கி இறையருள் பெற்று நற்பணிகளைச் சிறப்பாக நடாத்தக்கூடிய பெரும் பாக்கியம் எமக்குக் கிடைக்கிறது. அந்தவகையில் எமது அன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய உயர்திரு நாகேந்திரம் கருணாநிதி அவர்கள் இறைவனது திருவருளைப் பெற்ற ஒருவர் எனக் கூறலாம். இப்பெரியார் பேரறிஞர் திரு பற்றிமாகரன் அவர்களிடம் சைவசித்தாந்தம் மற்றும் திருமந்திரம் ஆகியவற்றை முறையாகக் கற்று "சைவசித்தாந்த ரத்தினம்" என்னும் சிறப்புப் பட்டத்தினையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட "திருமந்திரமும் வாழ்வியலும்" பட்டயத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சியையும் பெற்றார். இவர் "சைவ சித்தாந்தம் கைநூல்", "திருமந்திரம் சில முத்துக்கள்" ஆகிய புத்தகங்களைத் தொகுத்துள்ளார். இதேவேளை "சைவசமய வழிபாடும் விரதங்களும்" என்னும் இந்த அரியதோர் நூலையும் எழுதியுள்ளார். இவ்வாறு சைவத்திற்கும், தமிழுக்கும் பெரியதோர் தொண்டாற்றி எமது வரும்காலச் சந்ததியினருக்கு சமயத்தினூடாக அரிய சேவைகளைச் செய்துகொண்டிருக்கும் திரு நாகேந்திரம் கருணாநிதி அவர்களது சிறப்பான இப்பணிகளைப் பாராட்டி, மேலும் இவரது நற்பணிகள் தொடரவும், இவருக்கு நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் கிடைக்க வேண்டும் என இலண்டன் லூசியம் சிவபுரம் பதியில் வீற்றிருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரப் பெருமானது பாதாரவிந்தங்களைத் தொழுது அவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நல்லாசிகளைக் கூறுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ

சிவஸ்ரீ. இரகு கமலநாதக் குருக்கள் BA Hons

பிரதமகுரு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

புங்குடுதீவு – 6 இலண்டன்

18 Hydeside Gardens, Edmonton N9 9RR

07985 527429, ragu_kamal67@yahoo.co.uk




# ஆசியுரை

## சைவ சமய வழிபாடும் விரதங்களும்

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க.

ஆதியும் அந்தமும் அற்ற பரம்பொருளாகிய சிவபெருமானின் திருவருளால்தான் இவ்வுலகமும் இதில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் படைக்கப்பட்டு காத்தும் கரந்தும் அருளியும் மறைத்தும் ஆகிய ஐந்தொழில் ஆற்றுகின்றோர். சிவம் வேறும் சைவம் வேறல்ல. அன்பு நெறியே இதற்கு ஆதாரம் சைவ சமயத்தின் ஆதார நூல்களாக ரிக். யஜுர். சாமம். அதர்வம் எனும் நால் வேதங்களும் ஆதார நூல்களாகவும், சிவாகமங்கள் 28ம் வழிநூல்களாகவும் விளங்குகின்றன. இறைவனின் அருள்திறனையும் வெளிகாட்டும் பதினென் புராணங்களும் விளங்குகின்றன. தென்னகத்தை பொறுத்தவரை அருளாளர்களின் திருமுறைகளும் தலபுராணங்களும் உள்ளன.

அவ்வகையில் இறைவழிபாட்டிற்காக பல நூல்கள் எழுந்தன "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" எனும் வாக்கிற்கமைவாக இன்று உலகெங்கும் சைவம் பரவியுள்ளது. நவீன தொழில் நுட்ப வளர்ச்சி அபரிமிதமாக வளர்ச்சியுற்ற போதும் சமய அறிவு பற்றிய தெளிவும் விளக்கம் அவசியமாகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் ஈழத்தமிழர் பலஆலயங்களை அமைத்தும் பல சங்கங்களை அமைத்தும் நமது பாரம்பரியமான பண்பாட்டு விழுமியங்களை போற்றியும் அதனை அடுத்த சந்ததியினருக்கு எடுத்து விளக்கும் தேவையும் அவசியமும் கருதப்படுகின்றது. ஆகவேதான் பற்பல நூல்களை உருவாக்குகின்றார்கள். அவ்வகையில் சைவசித்தாந்தம் பயின்று தாம் வாழும் சமுதாயத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்று கருதி "சைவசமய வழிபாடும் விரதங்களும்" எனும் நூலை எழுதி வெளியிடுகின்றார்கள்.

இந்த நூலாசிரியர் ஆழ்ந்த இறை பக்தியும் இறையருளும் கிடைக்கப்பெற்றவர். அறப்பணியில் ஈடுபட்டு ரூட்டிங் முத்துமாரி அம்பாள் ஆலயம், வெம்பிளி நடராஜர் ஆலயம் ஆகியவற்றில் கடமையாற்றிய அனுபவமும் ஆற்றலும் கொண்டவர். புலம் பெயர் நாட்டில் வாழும் இளம் சந்ததியினருக்கு என்ன தேவை என்பதை அறிந்து இந்நூலைத் தொகுத்துள்ளார்.

இவரது ஆன்ம தேடல் காரணமாக சைவமுன்னேற்ற சங்க பயிற்சிப் பட்டறையில் திரு. பற்றிமாகரன் அவர்களிடம் சைவ சிந்தாந்த அறிவை பயின்று "சைவ சித்தாந்த ரத்தினம்" எனும் சிறப்புப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்த அனுபவத்தால் பல நூல்களை ஆராய்ந்து இந்நூலைத் தொகுத்துள்ளார். திரு நாகேந்திரம் கருணாநிதி அவர்களின் ஆன்மீகப் பணி தொடர என்பீல்ட் நாகபூசணி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

வாழ்க வளமுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



B. Vasantha Gurukkal BA (Hons)
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்
கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ
Home: 02085233802 | Temple: 02085273819 |
Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk



ஆசியுரை

சைவ சமய வழிபாடும் விரதங்களும்

இன்றைய நவீன யுகத்தில் மின்னியல் சாதனங்களும் உலகியல் பொழுது போக்குகளும் மலிந்து பெருகி இருக்கும் இவ் வேளையில் ஆன்மீக பரப்பில் நம்மை நுழைய வைப்பதற்கு ஆலயத் தளங்களும் அங்கு நடைபெறும் விழாக்களும் விரதங்களுமே காரணமாகின்றன.தாயகத்தில் நமது வழிபாடுகள் செய்வதும் புலம் பெயர் நாடுகளில் அவற்றைப் பின்பற்றுவதும் சற்றுக் கடினமாக இருந்தாலும் ஓரளவு உள்ளபடியே மரபு மாறாமல் நடைமுறைப்படுத்தும் முகமாக புலம் பெயர் நாடுகளில் அமைந்திருக்கும் ஆலய நிர்வாகிகள்,சிவாச்சாரியார்கள் அடியார்கள் முழு மனதுடன் ஈடுபட்டு வருகிறார்கள்.பலநூல்களும் பல விளக்கங்களும் அவ்வப்போது வெளி வந்தாலும் எமது சமய எல்லை பல மடங்கானது என்பதால் இன்னும் பல எளிய நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன.எளிமையாக வரவேண்டிய தேவையும் உள்ளன.

இருப்பினும் சமய தத்துவங்கள் விரத விளக்கங்கள் என்பன பற்றிய தெளிவின்மை இருப்பதும் இளையோர் மத்தியில் பலவேறு கேள்விக்கணைகள் தொடர்வதும் வழமையாகிறது.இக்குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சைவ சமய வழிபாடும் விரதங்களும் என்னும் இந்நூலும் அமைந்துள்ளது.

ஆலயங்கள் ஏன் அங்கு கூறப்படும் மந்திரங்களின் மகிமை என்ன? திருமுறைகளின் பெருமைகள் என்ன ? இறை வழிபாட்டில் வடமொழி தென்மொழி எனபவற்றின் தொடர்புகள் ஏன் இருக்கின்றன. சைவ சமயம் என்று நாம் நோக்கும் போது எமக்கு வடமொழி அந்நிய மொழி அல்ல எனபதை நுட்பமாக கூறியுள்ளார்.அடுத்து , இரண்டு பஞ்சாங்கங்கள் பற்றிய சிக்கல் இவை பற்றிய தெளிவு முதலியவற்றையும் தொடர்பு படுத்தி ஏன் ஆலயத்திற்கு செல்ல வேண்டும் எப்படிச் செல்ல வேண்டும்.ஏன் பலவகையான உருவ வழிபாடுகள்

என்று நம்மில் பலரும் கேட்கும் விடயங்களை விளக்கி உள்ளார்கள்.

இந்நூலாசிரியர் இயற்கையாகவே தெய்வீக அருளால் ஆன்மீக நூல்வள ஆற்றலைக் கொண்டுள்ளார் என்பதை அவரது சமய சிந்தனைகள் இணையத்தளங்களிலும் நூல்களிலும் மின்னஞ்சல்களிலும் இடை விடாது ஆன்மீக பொழுது போக்காக எழுந்து எழுத்துரு பெற்று உலா வருவதில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவயதில் இவரது குல தெய்வமான மயிலிட்டி கண்ணகை அம்மன் ஆலய சூழல் இவரை ஆன்மீகப் பயிராக வளர்த்துள்ளது.லண்டனில் ரூட்டிங் முத்துமாரி அம்மன் மற்றும் வெம்ப்ளி நடராஜர் கோவில்களிலும் அறப் பணி தொடர்ந்து சேவை ஆற்றிய பலன் உண்டு. இவரது சைவ சித்தாந்த ஈடுபாட்டின் காரணமாக சைவ முன்னேற்ற சங்கத்தின் சைவ சித்தாந்த மையத்தில் கற்று சைவ சித்தாந்த ரெத்தினம் என்னும் பட்டம் பெற்றவர்.அத்துடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட திருமந்திரமும் வாழ்வியலும் என்ற பட்டயத்தில் முதல் தேர்ச்சி பெற்றுள்ளமை இவரது ஆர்வத்தின் உச்சி நிலையாகும்.

இதன்காரணமாக " திருமந்திரம் சில முத்துக்கள் "சைவ சித்தாந்தம் கை நூல்" என்னும் சிறிய நூல்களையும் தொகுத்துள்ளார்.சைவ சமய நூல்களின் மூலங்கலானவேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள் திருமுறைகள் சைவசித்தாந்தங்கள் என்பவற்றைமுறையாக நன்கு நாம் உள்வாங்கிக் கொண்டால் வடமொழி தென்மொழிப் பிரச்சனையே வராது என்பதற்கு இவரது நூல் உதாரணமாக உள்ளது.இவரது ஆக்கப் பணிகள் மேன்மேலும் வளர்ந்து வர இறையருள் வேண்டுவதுடன் ஆயள் ஆரோக்கியமாக அவர்வாழ கற்பகபதி கற்பக விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்



சிவ வடிவம் – இலிங்க மூர்த்தி காசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

## இறைவணக்கம்

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே"

"திருமந்திரம்" நூலின் காப்புச் செய்யுளாகிய மேல் உள்ள பாடலின் கருத்து ஐந்து திருக்கரங்கள், பிரணவத்தின் வடிவாக யானை முகம், வெண்ணிலாவின் மூன்றாம் பிறைச்சந்திரன் போன்ற ஒற்றைக்கொம்புடையவன், பரம்பொருளின் திருமகன், அறிவின் உச்சியாக இருப்பவனைச் சிந்தையில் வைத்துத் தியானித்து அவன் திருவடி போற்றி வணங்குகிறேன். (திருமந்திரத்தில் சிவனுக்கு நந்தி என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது )

என்னுள் இருந்து என்னை இயக்கும் பரம்பொருளின் அம்சமான ஞானமுதல்வனாகிய கணபதியை வணங்கிச் சரஸ்வதிதேவியின் அருளையும் வேண்டி இம்முயற்சியை ஆரம்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வணக்கம்

“குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே.”

“திருமந்திரம்” பாடல் எண் 1581 இல் சிவப்பரம்பொருள்தான் ஞான குருநாதன் எனக் கூறப்பட்டுள்ளது. எனக்குக் குருவாக வந்த மதிப்பிற்குரிய ஆசான் “செந்நெறிச் செம்மல்” திருவாளர் சூ.யோ.பற்றிமாகரன் BA, Special Diploma(Oxford), BSC, PG Diploma, MA (Politics of Democracy), MA (Tamil) அவர்களின் பாதம் பணிந்து,

இந்த நூலக்கு ஆசி உரை, அணிந்துரை வழங்கிய எனது மதிப்புக்குரிய ஆலய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் எனது கட்டுரைகளை தொடர்ச்சியாக ஜேர்மனியில் இருந்து வெளிவரும் “வெற்றி மணி” புதினப் பத்திரிகையில் பதிவேற்றி எனக்கு ஊக்கமளித்த பத்திரிகை ஆசிரியர் கலாநிதி சிவகுமாரன் அவர்கட்கும், லண்டனில் ஹறோப் பகுதியில் இருந்து வெளிவரும் “ பார்வை “ புதினப் பத்திரிகையில் பதிவேற்றிய பத்திரிகை ஆசிரியர் கலாநிதி இரவி அவர்கட்கும், மயிலிட்டி மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் இணையத் தளத்தில் பதிவேற்றிய திரு அருண்குமார் அவர்கட்கும் இந்த நூலைப் பதிப்பித்த JR Printers, London அச்சகத்தாருக்கும் மற்றும் இப்புத்தகம் உருவாகுவதற்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடங்குமுன்

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே."

"திருமந்திரம்" நூலின் 85 ஆவதாக உள்ள மேல் உள்ள பாடலின் கருத்து நான் பெற்றதான இறை அருள் – கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும் என்பதாகும்.

"தொல்காப்பியம்" 3 ஆம் பாகம் பொருளதிகாரம் 4 ஆம் பகுதி "கற்பியல்" 51 ஆவது பாடல்

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி மக்களொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

நாம் கற்ற நல்ல விடையங்களை மற்றவர்களுக்கும் பயிற்றுவிக்க வேண்டும் எனக் கூறுகிறது. இதற்கமய இறைவன் அருளால் கிடைத்த சிறு அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றேன்.

நாகேந்திரம் கருணாநிதி



சிவ வடிவம் - சோமாஸ்கந்த மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. ஆலய வழிபாடு 01
2. ஐயம் தெளிதல் 02
3. ஆலயத்தில் உள்ள விக்கிரகங்களின் தத்துவம் 19
4. பஞ்சபுராணம் 42
5. தத்துவமசி 44
6. தைப்பொங்கல் 47
7. பிரதோசம் 49
8. அபிராமிப்பட்டர் விழா 53
9. தைப்பூசம் 55
10. சிவராத்திரி 56
11. விநாயக சதுர்த்தி 59
12. நவராத்திரி 61
13. கேதாரகௌரி விரதம் 64
14. தீபாவளி 69
15. கந்த சஷ்டி 73
16. கார்த்திகை விளக்கீடு 81
17. பிள்ளையார் பெரும் கதை விரதம் 83
18. திருவெம்பாவை 85




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, முருகப்பெருமானை நேரில் தரிசித்த, கலைவாணிக்கு நிகரானவர் எனப் போற்றப்படும் மூதாட்டி **ஔவையார்**

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் "

எனக் கூறியுள்ளார். ஏனெனில் கோயில் இறைவன் வாழும் இல்லம். கோயில் இறைவனை உணரும் ஈடற்ற இன்பத்திற்கு வழிகாட்டும் புனித இடம்.

மேலும் ஔவையார்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

எனவும் கூறியுள்ளார். அதாவது ஆலயவழிபாட்டால் மன அழுக்கை முற்றிலுமாகத் துடைக்கலாம். முறையான ஆலய தரிசனம், தொழுகை தெளிவான ஞானத்தை நிச்சயம் தரும்.

ஆலயம் என்பது ஆன்மா இறைவனில் லயிக்கின்ற இடம். ஆன்மாவின் ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் எனவும் கூறலாம். கோயில் என்பதன் பொருள் (கோ – அரசன், இல் – வீடு) அரசனுடைய வீடு என்பதாகும். தெய்வங்களுக்கு அரசனாக விளங்கும் சிவபெருமானின் ஆலயமே திருக்கோயில். இந்தியாவிலுள்ள சிதம்பரம் நடராசர் ஆலயமே கோயில் என அழைக்கப்பட்டது. சிவன் கோயில்கள் மட்டுமல்லாமல் நாளடைவில் பிள்ளையார், முருகன், அம்பிகை என மற்றத் தெய்வங்களின் அமைவிடமும் கோயில் என அழைக்கப்படலாயிற்று.

ஆலயங்கள் இறைவனோடு நம்மை இணைக்க வகை செய்யும் கலைக்கூடங்களாகும். ஆலயங்கள் நமது உடலைப் போன்றவை. அவற்றிலுள்ள மூர்த்தங்கள் ஜீவன் என்னும் பரம்பொருளாகும். உடல் கோபுரம். உள்ளம் பெரும் கோயில்.

இறைவன் நமக்குள் உறைகிறான் என்ற உணர்வு உறுதிபெற, உறுதிபெற நமது சுயத்தன்மையை மறைக்கும் அஞ்ஞானம் மறைந்துவிடும். இதற்கு ஒரே வழி ஆலய வழிபாடுதான்.

ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் பல்வேறு மந்திர, யந்திர வழிபாட்டு முறைகளால் இறைத்தன்மையை ஈர்த்துத் தன்னுள; தேக்கிவைத்து தம்மை வணங்குவோருக்கு அருள் புரியும் வல்லமை பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாடுபற்றி இளம்வயதினர்களுக்குத் தோன்றும் ஐயப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கேள்வி பதிலாக இவ்விடையத்தைப் பார்ப்போம்

# ஐயம் தெளிதல்

## 1. நாம் ஏன் கடவுளைக் கும்பிடவேண்டும் ?

நாம் முற்பிறவிகளில் செய்த வினையின் ஒருபகுதியை அனுபவிப்பதற்கே இறைவன் திருவருளால் இப்பிறவியை எடுத்துள்ளோம். இவ்வினையை இலகுவாகக் கடந்து செல்வதற்கு நாம் இறைவனை நாடவேண்டும். ஆற்றைக் கடக்க ஓடத்தைப் பாவிப்பது போலவும், தண்ணீர் குடத்தைத் தலையில் சுமக்கும் போது தலைக்கும் குடத்திற்கும் இடையில் சும்மாடு (துணியால் வட்டமாகச் சுற்றப்பட்ட திருகணி) வைத்துப் பாரத்தைச் சுலபமாக்குவது போலவும் இறைவன் அருளினால் எமது வினைகளை நாம் இலகுவாகக் கடந்து செல்லலாம். அது மட்டுமல்ல இப்பிறவியில் மேலும் தீய வினைகளைச் செய்யாமல் நல் வினைகளைச் செய்வதற்கு எம்மை நாமே பக்குவப்படுத்துவதற்கு இறைஅருளை வேண்டுவதற்கும் நாம் இறைவனை நாடவேண்டும். சுருக்கமாக நாம் இறைவனை நாடுவது எமது தேவைகளை வரமாகக் கேட்டுப்பெறுவதற்கும், எமக்கு ஏற்படும் பயத்தைப் போக்க இறைவனிடம் வேண்டுவதற்குமாகும்.

## 2. நாம் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்? வீட்டில் கும்பிடமுடியாதா ?

வீட்டில் பூஜை அறை அமைத்து நாம் செய்யும் பூஜை **ஆத்மார்த்தப் பூஜை** ஆகும் ஆலயத்தில் பொதுவாக (எங்களுக்காக) சிவாச்சாரியார் செய்யும் பூஜை **பரார்த்த பூஜை** (பர - மற்றவர், அர்த்த - பொருட்டு) ஆகும். மூங்கில் காட்டில் உள்ள மூங்கில் முழுவதிலும் தீயை உருவாக்கும் தன்மை இருப்பினும் உராயும் இடத்தில் மட்டும் தீ உருவாகுவதைப்போலவும், சூரிய ஒளியை பூதக் கண்ணாடியினூடாகச் செலுத்தி நெருப்பை உண்டாக்குவது போலவும் இறைவன் எங்கும் நிறைந்திருப்பவராயினும் இறை அருள் வெளிப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆகம முறைப்படி அமையும் ஆலய அமைப்பும், ஆலயம் அமைக்கும் போது அங்கு பிரதிஸ்டை செய்யப்படும் விக்கிரகங்களும், அவற்றின் கீழ் வைக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரமும், அப்பொழுது செய்யப்படும் கிரியைகளும் (கும்பாபிஷேகம்) எங்கும் பரந்துள்ள இறைசக்தியை அங்கு குவியச் செய்கின்றன. அதுமட்டுமல்ல ஆலயத்தில் தினமும் நடக்கும் மந்திர உச்சாடனத்தாலும், அபிசேக ஆராதனைகளாலும், அருச்சனை முதலிய கிரியைகளாலும், திருமுறைப் பாடல்களாலும், மகோற்சவம், விசேடகால உற்சவங்களாலும் அன்னதானம் போன்ற நற்காரியங்கள் நடப்பதாலும் இறைஅருள் தொடர்ந்து சுரக்கும் இடமாக ஆலயம் திகழ்கின்றது. ஆலயங்கள் இறைவழிபாடு மட்டுமின்றி எமது மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் இடமாகவும் மிளிர்கின்றன. ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் எப்பொழுதும் எமது தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பதைக் குறிக்க **வரதகரத்துடனும்**, பயத்தை நீக்க **அபயகரத்துடனும்** தரிசனம் தருகின்றன.

ஆலயத்தில் ஒலிக்கின்ற மந்திர ஒலிகளும், திருமுறைப்பாடல்களும், மணிஓசை, நாதஸ்வரம், மேளம் முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலிகளும், சாம்பிராணி வாசனை என்பனவும் எமக்குப் பக்தி உணர்வினை எழுப்புகின்றன. இச்சூழ்நிலை எமது ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாட்டிற்கு உகந்ததாக உள்ளது. முறையான ஆலய தரிசனம் , தொழுகை தெளிவான ஞானத்தை நிச்சயம் ஊட்டும்.

## 3. உருவ வழிபாடு ஏன் ?

வழிபாட்டில் இரண்டு விதம் உண்டு. ஒன்று அருவ வழிபாடு மற்றது உருவ வழிபாடு. அருவ வழிபாட்டிற்கு நாம் எம்மைத் தயார் செய்வதற்கும் பார்க்க உருவ வழிபாடு சுலபமானதாகும். உருவ வழிபாடே பெரும்பான்மையான எளிய மக்களுக்கு ஏற்ற முறை. ஏனெனில் உருவங்களைப் பார்த்தே பழகிப்போன நாம் உருவமில்லாமல் ஒன்றைச் சிந்தித்தல் சற்று கடினமானதாகும்.

## 4. பல விக்கிரக வழிபாடு ஏன் ?

இறைவன் ஒருவன்தான். பரம்பொருளாகிய இறைவன் ஆன்மாக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பல விடையங்களைச் செய்யவேண்டி இருப்பதால் பல ரூபத்தோடு பல காட்சிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கின்றார். இவற்றை நாம் அறியவேண்டும் என்பதற்காக அந்தந்தத் திருக்கோலங்களாக உருவங்களை ஆலயத்தில் வைத்துள்ளார்கள். உதாரணத்திற்கு நமது வீட்டில் உள்ள ஒரு பெரியவரின் புகைப் படங்களைப் பார்ப்போமானால் அவர் குழந்தையாக, சிறு வயதாக, வாலிப வயதாக, திருமணமாகி துணையுடன், குழந்தை பெற்றுப் பிள்ளையுடன், பிள்ளையின் திருமணத்தில், பேரப் பிள்ளையுடன் இவ்வாறு அவரின் பல தோற்றங்களை நாம் ஞாபகத்திற்காக வைத்துள்ளோம். பெரியவர் ஒருவர்தான் பலர் இல்லை ஆனால் பல தோற்றங்களில் காட்சிகொடுக்கின்றார். இவ்வாறுதான் இறைவன் ஒருவன்தான் பல ரூபத்தில் காட்சிதருகின்றான். முற்காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த நாம் தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை எனப் பல உறவினர்களுடன் உறவாடி, எங்களுக்குப் பிடித்தவர்களிடம் தேவையானவற்றைப் பெற்று வாழப் பழகியுள்ளோம். இறைவனிடமும் இதே வழியைப் பின் பற்றிப் பிடித்த தெய்வங்களை வணங்கி எமக்குத் தேவையானவற்றைப் பெறுவது சுலபமான காரியமாகும்.

## 5. ஆலயத்துக்குச் செல்வது எப்படி ?

நாம் ஆலயத்திற்குச் செல்லும் போது **அகத்தூய்மையுடனும், புறத்தூய்மையுடனும்** செல்லவேண்டும். அகத்தூய்மைக்கு வாய்மையே வழி. இறையாற்றலின்பால் எமக்கு உள்ள நம்பிக்கையும், அறம் தவறின் தெய்வம் எமது வேண்டுதலை நிறைவேற்றாது என்ற அற உணர்வோடும் நாம் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். புறத்தூய்மையானது வெளிச் சுத்தம் அதாவது குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்தி வீட்டிலிருந்து இடையில் எங்கும் செல்லாமல் நேராக ஆலயத்திற்குச் செல்லவேண்டும். இறைவன் இருக்கும் அதி உன்னதமான இடமாகிய ஆலயத்தையும் நாம் சுத்தமாகப் பேணவேண்டும்.

## 6. ஆலயத்தினுள் செய்யக்கூடாதவை எவை ?

1. நாம் இறை சக்தி நிறைந்திருக்கும் இடமாகிய ஆலயத்தை புனிதமாகவும் துப்பரவாகவும் பேண வேண்டும்.
2. கோயிலில் மூலவருக்கு நேர் எதிராக நின்று கும்பிடக்கூடாது. கருவறையில் சுவாமியின் இருபுறமும் நின்றுதான் வணங்கவேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி **கடைக்கண்களே**"

என அபிராமிப்பட்டர் **அபிராமி அந்தாதியில்** கூறியுள்ளார். விக்கிரகத்தை மறைத்து அவற்றிற்கு நேர் எதிராக நிற்கும்போது மற்ற அடியார்கள் சுவாமியைத் தரிசிக்கவிடாமல் தடுக்கும் பாவத்தை நாம் செய்கின்றோம். அடியார்களைச் சிவனாகப் பாவிக்கவேண்டும் என்பது சைவ மரபாகும். சுவாமிக்கு நேர் எதிராக நிற்பது சுவாமியை எதிர்த்து நிற்பது போலாகும் எனக் காஞ்சிப்பெரியவர் கூறியுள்ளார்.

3. விக்கிரகங்களை நாம் தொட்டுக் கும்பிடக்கூடாது.
4. நந்திக்கும் மூலவருக்கும் இடையில் குறுக்காக நடக்கக்கூடாது.
5. கோயிலுக்குள் இறைநாமத்தைத் தவிர பிற வார்த்தைகள் பேசக்கூடாது. வேண்டத்தகாத வார்த்தைகளை நாம் பேசும;போது மற்ற அடியவர்களின் அமைதியான பிரார்த்தனைக்கு நாம் இடையூறாக இருக்கின்றோம்.
6. பெற்றோர் குழந்தைகளை மற்ற அடியவர்களின் பிரார்த்தனைக்கு இடையூறு செய்யாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
7. கோயிலுக்குள் கவர்ச்சியான ஆடை அணிகலன்களை அணியக்கூடாது. எமது கவரச்சி மற்ற அடியவர்களின் புலனடக்கத்தைப் பாதிக்கும்.
8. கோயிலுக்குள் பெண்கள் தலைவிரி கோலமாகச் செல்லக்கூடாது. விரித்த கூந்தலை துக்கநிகழ்ச்சியாகவும், அபசகுனமாகவும் பார்ப்பது எமது மரபு. கோயிலுக்குள் இது மற்ற அடியவர்க்கு இடையூறாக இருப்பதுமட்டுமல்ல அங்கு ஏற்றப்பட்டிருக்கும் தீபங்களிலிருந்து கூந்தலில் தீ பிடிக்கும் அபாயமும் உள்ளது.
9. ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதத்தை வீணாக்காமல் அளவோடு எடுத்து நிலத்தில் சிந்தாமல் உண்ண வேண்டும். நிலத்தில் சிந்தும் பிரசாதத்தால் மற்ற அடியவர்களின் பாதங்கள் மட்டுமல்ல ஆலய துப்பரவும் பாதிக்கப்படுகிறது. பிரசாதத்தை வீணாக்குவதால் மற்ற அடியார்களுக்கு பிரசாதம் இல்லாமல் போகிறது மட்டுமல்லாமல் உலகில் பல பாகங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின்றிப் பட்டினியால் இறப்பவர்களைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

## 7. ஆலயங்களில் பூசை சமஸ்கிருதத்தில் ஏன் நடத்தவேண்டும் தமிழில் நடத்தினால் என்ன ?

மந்திரம் இல்லாத வழிபாடு பலன் தராது என்பது சிவாகமக் கருத்தாகும். வேதமந்திரங்கள் இறைவனால் நாத வடிவில் ரிசிகளுக்கு உபதேசிக்கப்பட்டவையாகும். இதையே நமது முன்னோர் குரு சிஷ்ய முறைப்படி (குருகுல வாசம்) குருவிடமிருந்து வாய்மொழி மூலம் கேட்டு அறிந்து வந்தார்கள். இன்றும் அவை தொடர்கின்றன. மந்திரங்கள் சமஷ்கிருத மொழியில் ரிசிகளால் தொகுக்கப்பட்டுள்ளன. சமஷ்கிருதம் தேவ பாஷை எனக் கூறப்படுகிறது. ஆகமங்களை இறைவன் இறை அருள் பெற்ற அருளாளர்கள் மூலம் தோற்றுவித்தான். ஆலயவழிபாடு வேதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு நடைபெறுகின்றது. வேதங்கள், ஆகமங்கள் இரண்டும் சமஷ்கிருத மொழியிலேயே உள்ளன. வேதமந்திரங்களை பீஜம் எனப்படும் ஓசை (அதிர்வு) சரியாக உச்சரிக்கப்படாவிட்டால் அவற்றின் பலனை நாம் பெறமுடியாது. எனவே அவற்றை நாம் தமிழில் மொழிபெயர்த்துப் பாவிக்க முடியாது. தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகள் மந்திரங்களின் அதிர்வினால் தான் அவை பலனளிக்கின்றன என்பதனை நிரூபிக்கின்றன. எனவே முழுமுதற்கடவுளான சிவபெருமானால் தவமுனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட வேத, ஆகமங்களை நாம் புறம் தள்ளமுடியாது.

இறைவனே அருளாளர்களுக்கு தமிழ்மூலம் தன்னைப் பாடுமாறு கூறியதாக நாயன்மாரின் வரலாற்றிலும், புராணங்களிலும் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் வேதத்திற்கு அதிபதியாகிய பிரம்மதேவனைத் திருமூலராக அவதரித்துத் தமிழ் மூலம் தன்னைப் பாடுமாறு பணித்ததாகப் புராணக்கதை கூறுகிறது. சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் திருமூலதேவநாயனார் புராணம் 23 ஆவது பாடலில்

> "தண்ணிலவார் சடையார்தாம்
> தந்த ஆகமப்பொருளை
> மண்ணின் மிசைத் திருமூலர்
> வாக்கினால் தமிழ் வகுப்பக் . . . . . "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது குளிர்ந்த நிலவணிந்த திருச்சடையை உடைய சிவபெருமான் தாம் அருளிய ஆகமப் பொருளை இந்நிலவுலகில் திருமூலர் வாக்கினால் தமிழால் சொல்லுதற்கு ஏற்ப என்பதாகும்.

இதையே திருமூலரும் திருமந்திரம் 81 ஆவது பாடலில்
"பின்னை நின்று என்னே . . . . . . . . . . எனத் தொடங்கி
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
இறைவன் என்னைத் தமிழ் ஆகமம் படைக்கப் படைத்துள்ளான் எனக் கூறியுள்ளார்.

சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் "பித்தா" எனத் தமிழில் அடி எடுத்துக் கொடுத்துத் தன்னைப் பாடுமாறு கூறிய வரலாறும்,

சேக்கிழார்பெருமானுக்கு "உலகெலாம்" என பெரியபுராணத்திற்கு அடி எடுத்துக் கொடுத்த வரலாறும் உள்ளது.

அருணகிரிநாதர் "முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்" எனவும் குமரகுருபரர் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் – முதலாவது காப்புப் பருவம் பாடல் 1 இன் இறுதியில்

"பைந்தமிழ் பின் சென்ற பச்சைப்பசும் குன்றலே"

என இறைவன் தமிழுக்குப் பின்னால்ச் சென்றான் எனவும் பாடியுள்ளார்கள். இவ்வாறு பல அருளாளர்களால் தமிழில் பாடிய பாடல்கள் 12 திருமுறைகளாகும். இவற்றைப் பொருளறிந்து, பண்ணுடன் பாடி நாம் இறைவனை வழிபடலாம்.

இதை மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில்

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்" எனவும்,

திருநாவுக்கரசர்

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாட மறந்தறியேன்"

எனவும் பொருளையும், இசையையும் வற்புறுத்தியுள்ளார்கள். இவ்வாறே நாயன்மார்கள் பொருளறிந்து, மனமுருகிப், பண்ணுடன் பாடல்களைப் பாடியே பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். வேதமந்திரங்களுக்கு அதன் உச்சரிப்பு எவ்வளவு முக்கியமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே திருமுறைப் பாடல்களுக்கும் அவற்றின் உச்சரிப்பும், பண்ணும் முக்கியமாகும்.

நாயன்மார்களால் தமிழில் பாடிய தேவாரங்களால் நடந்த சில அற்புதங்களைப் பார்ப்போமானால் **திருஞானசம்பந்தப் பெருமான்** மதுரையில் பாண்டிய மன்னனின் வெப்பு நோயை

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே."

எனத்தொடங்கும் பதினொரு பாடல்களைப் பாடித் (2 ஆம் திருமுறை) தீர்த்த அற்புதம் நடந்தது

திருமருகலில் பாம்பு தீண்டி இறந்தவரை
"சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே."

எனத்தொடங்கும் பதினொரு பாடல்களைப் பாடி (2 ஆம் திருமுறை) உயிர்ப்பித்த அற்புதம் நடந்தது.
இவ்வாறு பல அற்புதங்கள் தமிழ்ப் பாடல்கள் மூலம் நடந்தன.

இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளான சமஸ்கிருதம், தமிழ் இரண்டும் இரு கண்கள் போன்றவை. இவற்றில் நாம் பேதம் பாராமல் ஆலயப் பொது வழிபாட்டு முறைகள் காலம், காலமாக நடப்பது போல சமஸ்கிருதத்திலும், எமது சொந்த வழிபாடு எமது தாய் மொழியாகிய தமிழிலும் நடத்தலாம், ஆலயங்களில் சமஸ்கிருதம் தெரியாத அடியார்களின் நன்மை கருதி குருமார் ஆலய கிரியைகள் பற்றிய விளக்கங்களை கிரியை நடப்பதற்கு முன்போ, அல்லது பின்போ கூறலாம். தமிழர்களாகிய நாம் எமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வேறு மொழிகளைப் படிப்பது போல எமது சமய அறிவை வளர்ப்பதற்காக சமஸ்கிருதத்தைப் படிக்கலாம். திருமுறைகளை பொருளறிந்து பண்ணுடன் ஓதுவதற்கு ஓதுவார் மூர்த்திகளின் சேவையை நாம் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. புராணக்கதைகள் உண்மையானவையா ?

புராணக்கதைகள் வேதத்தில் கூறப்பட்ட தத்துவங்களை, நீதி முறைகளை விரிவாக மக்கள் புரிந்து கொள்வதற்காகக் கூறப்பட்ட உண்மைக் கதைகளாகும். வேதமந்திரமான "ஸத்யம் வத" (உண்மை பேசு) ஹரிச்சந்திர புராணமாகவும், "தர்மம் சர" (அறத்தைப் பின்பற்று) மஹாபாரதமாகவும், "மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ" (தாய், தந்தையருக்குக் கீழ்ப்படிதல்) இராமாயணமாகவும் பெரிதாக விரிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எல்லாப் புராணங்களும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காக தத்துவங்கள் மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கில் அந்தந்தக் காலத்திற்கேற்ப சில விடையங்களை பெரிதுபடுத்திக் கூறியுள்ளார்கள்.

புராணங்கள் 18 (வாயு புராணத்துடன் 19 எனவும் கொள்ளப்படுகின்றது) பெரிய புராணங்களும், 18 உப (சிறிய) புராணங்களும் ஆக வியாச முனிவரால் தொகுக்கப்பட்டன. பெரியபுராணம் தவிர்ந்த மற்ற எல்லாப் புராணங்களும் சமஸ்க்கிருத மொழியில்தான் இருந்தன. பிற்காலத்தில் தமிழில் ஸ்காந்தம் என்னும் புராணம் கச்சியப்பசிவாச்சாரியாரால் கந்தபுராணமாகவும், ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் உப புராணம் திருவிளையாடற் புராணமாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு மேலும் பல புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பெரியபுராணம் மட்டும் தமிழிலிருந்து சமஸ்க்கிருதத்திற்கு "உபமன்யு பக்த விலாசம்" என மொழிபெயர்க்கப்பட்டது.

புராணங்கள் பிரம்மாவிடமிருந்து வெளிப்பட்டதாக சாந்தோக்கிய உபநிடதத்திலும், மத்ஸ்ய புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததாகவே சைவசமயம் கூறுகிறது. சைவ சித்தாந்தம் பிரம்மாவை சிவனின் ஒரு அங்கமாகப் பார்ப்பதால் இதில் முரண்பாடு உள்ளதாக நாம் எடுக்கமுடியாது.

திருஞானசம்பந்தப்பெருமான் புராணங்கள் சிவனிடமிருந்து வந்ததைத் பின்வரும் பாடலில் 4 வேதங்களும், 18 புராணங்களும், 6 வேதாங்கங்களும் இறைவனால் விரித்து உரைக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே<br>
வேத நான்கும் **பதினெட்டோடு** ஆறும் விரித்தார்கு இடம்<br>
தாதுவிண்டம் மதுவண்டு மிண்டிவரு வண்டினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதம்பாடம் மடமந்தி கேட்டுகளும் கேதாரமே"

மேலும்

"பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே"

எனப் புராணங்கள் சிவனிலிருந்து நந்தி, சனற்குமாரர், சூத முனிவருக்கூடாக வந்து வியாச முனிவரால் வகுக்கப்பட்டதைக் கூறியுள்ளார்

மேலும்

"மூவார் புரங்கள்ளரித்த அன்று
மூவர்க் கருள் செய்தார்"

எனத் திரிபுரங்களை எரித்த பொழுது மூவரை மட்டும் சிவன் காப்பாற்றினான் என்று கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனார் பின்வரும் பாடலில் சிவன் தான் காப்பாற்றிய மூவருள் இருவரை வாயில்க் காவலர்களாகவும், ஒருவரைத் தான் ஆடும் திருநடனத்திற்கு மத்தளம் முழங்குபவராகவும் நியமித்தார் எனக் கூறியுள்ளார்.

"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
இருவர்நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
ஒருவன் நீகரிகாடரங்காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவதேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூருளானே"

மாணிக்கவாசகப்பெருமான் திருவாசகத்தில் உள்ள திருவுந்தியாரில்

"வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன்வெந்தவா றுந்தீபற" எனவும்

சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாறு திருப்பாசுர விளக்கத்தில்

"வேத முதல்வன் எனும் மெய் திருப்பாட்டினிேனர்
ஆதி உலகோர் இடர்நீங்கிட ஏத்த ஆடும்
பாத முதலாம் **பதிணெண் புராணங்கள்** என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒது என்று உரை செய்தனர் யாவும் ஒதாதுணர்ந்தார்" எனவும்

அருணந்தி சிவாச்சாரியார் பின்வரும் "சிவஞானசித்தியார்" சுப பக்கம் பாடல் எண் 266 இல் வேதாகமப்பொருள்களை விரிவுபடுத்தி இறைவன் அருளால் அருளாளர்கள் புராணங்களை உருவாக்கினார்கள் எனக் கூறியுள்ளார்

"அருமறை ஆகமம்முதல்நூல் அனைத்தும்உரைக்கையினான்
அளிப்புஅரிதாம் அப்பொருளை அரன்அருளால் அணுக்கள்
தருவர்கள் பின்தனித்தனியே தாம்அறிந்த அளவில்
தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து
மிருதி **புராணம்** கலைகள் மற்றும் எல்லாம்
மெய்நூலின்வழி புடையாம் அங்கம் வேதாங்கம்
சுருதி சிவாகமம் ஒழியச்சொல்லுவது ஒன்றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சோல்லொ ணாதே"

திருமூலநாயனார் "திருமந்திரம்" இரண்டாம் தந்திரத்தில் 337 ஆம் பாடலிலிருந்து 375 வரையில் இலிங்க புராணம், தக்கன்வேள்வி, அடிமுடி தேடல் போன்ற பல புராணங்களை எடுத்து அவற்றில் உள்ள நல்லொழுக்கம், உண்மைப்பொருள் விளக்கம், ஐந்தொழில்களின் செயற்பாடுக்கேற்ப உயிர்களின் செயற்பாடுகள் பற்றி விளக்கியுள்ளார்.

புராணங்கள் பற்றிச் சமயகுரவர்கள், சந்தானகுரவர்கள், திருமூலநாயனார், சேக்கிழார் பெருமான் உட்பட பல இறை அருள் பெற்ற அருளாளர்களின் கூற்றுக்கு மேலாக நாம் எந்தவித ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.



சிவ வடிவம் - சேத்திரபால மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சைவ சித்தாந்தம் வேதாந்தத்திற்கு முரண்பாடானதா ?

சித்தாந்தமும் வேதாந்தமும் சைவசமயத்தின் இரு கண்களைப்போன்றவை. வேதாந்தம் என்பது 4 வேதங்களின் ( 108 உபநிடதங்கள் உட்பட ) முடிந்த முடிவு. சித்தாந்தம் என்பது 28 ஆகமங்களின் ( 207 உப ஆகமங்கள் உட்பட ) முடிந்த முடிவு. சைவ சித்தாந்தத்தை ஆகமாந்தம் எனவும் கூறுவர். இரண்டும் ஆன்மா இறைவனை நாடும், போயடையும் வழி முறைகளைக் கூறுகின்றன.

**சிவப்பிரகாசம்** 7 ஆவது பாடல்

"புறச்சமயத் தவர்க்குஇருளாய் அகச்சமயத்துஒளியாய்ப்
புகலளவைக்கு அளவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோல் பேதமுஞ்சொற்
பொருள்போல்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடல்உயிர்கண்அருக்கன்
அறவொளிபோல் பிறிவருமத் துவித மாகுஞ்
சிறப்பினதாய் **வேதாந்தத் தெளிவாம் சைவ**
**சித்தாந்த் திறனிங்கு தெரிக்கல் உற்றாம்"**

அதாவது வேதாந்தத்தின் தெளிவு சைவசித்தாந்தம் எனக் கூறுகிறது.

**திருமந்திரம்** 2397 ஆம் பாடல்

"**வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்**
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன்உரை அவைநாடில் இரண்டு அந்தம்
பேதம்அது என்பர் பெரியோர்க்கு அபேதமே"

வேதங்கள், ஆகமங்கள் எல்லாம் இறையருள் கூறும், இறைவனால் அருளிச்செய்யப்பட்ட உண்மைப்பொருளுணர்த்தும் உயர்ந்த நூல்களாகும். ஓதப்படும் வேதம் பொதுவானது என்றும், ஆகமம் சிறப்புடையது எனவும், இறைவன் அருளிய இரண்டுமே ஒன்றுதான் எனவும் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமந்திரம்** 57 ஆம் பாடல்

"அஞ்சன மேனி அரிவைஓர் பாகத்தன்
அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே"

28 ஆகமங்களையும் 66 முனிவர்களுக்கு சிவபெருமான் தனது 5 ஆவது ( ஈசான ) முகத்தால் அருளிச்செய்தார் எனக் கூறுகிறது.

**திருமந்திரம்** 54 ஆம் பாடல்

"திருநெறி ஆவது சித்து அசித்தன்றிப்
பெருநெறி ஆய பிரானை நினைந்து
குருநெறி ஆம் சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே."

அதாவது சித்தாந்தம், வேதாந்தம், சன்மார்க்கம், பூசை வழிபாடு என்கின்ற எல்லா வழிகளுமே இறைஅருள் பெற உதவும் திருநெறிகளே எனக் கூறுகிறது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகள் அருளிய **பண்டார மும்மணிக் கோவை** என்னும் நூலில் பாடல் எண் 11 இல் வேதாந்தம் பழம் எனவும் சைவ சித்தாந்தம் அதன் சாறு எனவும் கூறப்பட்டுள்ளது.

**தாயுமானவர்** வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள் தான் உண்மையான சித்தர்கள் எனக் கூறியுள்ளார்.

பாம்பன் சுவாமிகள், சிவஞான சுவாமிகள், காசிவாசி செந்தி நாத ஐயர் உட்படப் பலர் மேற்படி கருத்தையே கூறியுள்ளனர்.

**மாணிக்கவாசகப்பெருமான்** திருவாசகத்தில்

"ஆகமம் ஆகி நின்றண்ணிப்பான் தாழ் வாழ்க"

எனக்கூறியுள்ளார்

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானால் காலத்திற்குக் காலம் தவமுனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட வேதங்களும் ஆகமங்களும் எவ்வாறு முரண்பட முடியும் என்பது சிந்திக்கத்தக்கது.

சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்கும் இடையில் உள்ள சில வேறுபாடுகளைக் கூறுவதாயின் வேதாந்தம் நான் (ஆன்மா) இறைவனாக இருக்கின்றேன். ( சாம வேத மகா வாக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தத்துவம் அஸி** - தன்நிலைக் கூற்று) ஆனால் சித்தாந்தம் இறைவன் ஆன்மாவாக இருக்கிறார் (பிறநிலைக்கூற்று). வேதாந்தம் இறைவனிடமிருந்து ஆன்மா தோன்றியதாகக் கூறுகிறது. ஆனால் சித்தாந்தம் ஆன்மா என்றும் உள்ள பொருள் அது தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை எனக் கூறுகிறது. வேதாந்தம் ஆன்மா எல்லா வினைகளையும் அனுபவித்து முடித்த பின் உடலை விட்டு நீங்கி இறைவனுடன் சேருவதாகக் கூறுகிறது. ஆனால் சித்தாந்தம் ஆன்மா எல்லா வினைகளையும் அனுபவித்து முடித்த பின் உடலை விட்டு நீங்கி இறைவனுடைய காலடியில் அமர்கிறது எனக் கூறுகிறது.

கி. மு. 6, 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், மஹாபாரதம் என்னும் இதிகாசத்தையும், ஸ்ரீமத் பாகவத புராணத்தையும் இயற்றியவரும், 4 வேதங்களையும், 18 புராணங்களையும் தொகுத்தவருமான வேதவியாசமுனிவரால் ஆக்கப்பட்ட வேதாந்தத்தில் உள்ள பிரம்மசூத்திரம் உட்படச் சில பகுதிகளை மட்டும் சைவ சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளவில்லை. வியாசமுனிவர் பொய் கூறியதால் அதிகார நந்தியால் தண்டிக்கப்பட்டார் என புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்குச் சான்று கூறுவது போல எந்தவொரு சைவ ஆலயத்திலும் வியாசமுனிவரின் சிலை அல்லது விக்கிரகம் இல்லாதிருப்பதை நாம் இன்றும் பார்க்கலாம்.

## 10. சைவசமய விழாக்கள் ஏன் வெவ்வேறு நாட்களில் நடக்கின்றன ?

1. எமது பஞ்சாங்கக் கணிப்புகள் யாவும் சூரியன் உதயமாகும், அஸ்த்தமனமாகும் நேரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் கணிக்கப்படுகின்றன.
2. நாம் காலம் காலமாகப் பாவிப்பது "வாக்கிய பஞ்சாங்கம்" ஆகும் இது பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ரிசிகளால் அருளப்பட்ட சுலோகங்களின் அடிப்படையில் எவ்வித மாற்றமும் செய்யாமல் அவர்களின் பழைய கணித முறைப்படி கணிக்கப்படுவதாகும்.
3. சூரிய உதயம், அஸ்த்தமனம் இடத்திற்கிடம் மாறுபடுவதாலும், தற்கால விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக (சந்திரனின் வட்டப்பாதையில் ஏற்படும் மாற்றங்களை கணக்கில் எடுத்து) பல வருடங்களுக்கு முன்பு "திருக்கணித பஞ்சாங்கம்" உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் பலகாலமாக இரண்டு பஞ்சாங்கங்களும் பாவனையில் இருக்கின்றன. இரண்டு கணிப்புகளுக்கும் இடையில் சில வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடு பௌர்ணமி, அமாவாசையில் குறைவாகவும், அஸ்டமி, நவமியில் கூடுதலாகவும் (அதிகபட்சம் 6 மணி 48 நிமிடம்) இருக்கின்றன. ஒரே நாட்டு நேரத்திற்குக் கணிக்கப்பட்டாலும் இவ் வேறுபாடுகள் நிச்சயமாக இருக்கும்.

5. தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனிப் பஞ்சாங்கங்கள் உள்ளன.

6. இந்தியாவில் திரு ஜவகர்லால் நேரு இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்தகாலத்தில் அவரால் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட பல அறிஞர்கள் கொண்ட குழு "திருக்கணிதம்" தான் தற்காலத்திற்குப் பொருத்தமானது என முடிவு செய்தது.

7. உதாரணமாக இலண்டனில் சூரியன் உதயமாகும், அஸ்த்தமனமாகும் நேரங்கள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் போன்றதல்ல. அங்கு சூரிய உதயம் சராசரி காலை 6.00 மணி. இலண்டனில் காலை 4.45 (கோடைகாலத்தில்) இலிருந்து, 8.00 (குளிர்காலத்தில்) மணிவரைக்கும் நடைபெறும். சூரிய அஸ்தமனமும் இவ்வாறுதான். அதுமட்டுமல்ல சராசரி 4.5 அல்லது 5.5 மணி நேர வித்தியாசமும் உள்ளது. இதனால் இலண்டனில் சூரிய உதய, அஸ்த்தமன நேரங்களை எடுத்துக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கம், கலண்டர்தான் இலண்டனில் பாவிப்பதற்கு ஏற்றதாகும். இலங்கை, இந்திய சூரிய உதய, அஸ்த்தமன நேரங்களுடன் 4.5 , 5.5 மணி நேரங்களை கூட்டி அல்லது கழித்து கணிக்கப்பட்ட இலங்கை, இந்தியப் பஞ்சாங்கம், கலண்டர்களை இலண்டனில் பாவிப்பது பொருத்தமற்றதாகும்.

இதை **"தமிழ்நாட்டில் மழைபெய்தால் லண்டனில் குடைபிடிக்கலாமா?"** என கேலியாகக் கூறுவார்கள்.

8. 2015 ஆம் ஆண்டு தைப்பொங்கலை எடுத்துக் கொண்டால் சூரியன் மகரராசிக்குள் (மகரசங்கிராந்தி) பிரவேசிக்கும் நாள் (நேரம்) தைப்பொங்கலாகும். 2015 ஆண்டு 14 – 01 – 2015 அன்று இலண்டன் நேரத்திற்குப் பி.ப. 01.58 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது. இது இலங்கை, இந்திய நேரப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு 7.28 ஆகும். சூரிய அஸ்த்தமனத்திற்குப் பின்பாகையால் அங்கு மறுநாள் 15 – 01 – 2015 இல் தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது. உதாரணமாக லண்டனில் காலை 11.00 க்கு இந்நிகழ்வு நடைபெற்றிருந்தால் இலங்கை, இந்தியாவில் மாலை 5.30 மணியாகையால் அங்கும் 14 – 01 – 2015 இல் கொண்டாடப்பட்டிருக்கும். சூரிய அஸ்த்தமனத்திற்கு பின்பு நடைபெறும் நிகழ்வுகளை மறு நாள் எடுப்பது மரபாகும். 14 ஆம் திகதி இலண்டன் நேரத்திற்குப் பி.ப. 01.58 மணிக்கு சூரியன் மகரராசிக்குள் பிரவேசிக்கும் போது 15 ஆம் திகதி இலண்டனில் பொங்கல் கொண்டாடுவது தவறாகும்.

9. இலண்டனில் ஈழத்தமிழர்களால் நடாத்தப்படும் 1998 இல் ஆரம்பித்த பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் அதன் முதலாவது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்களில் ஒன்று "இலண்டனில் இலண்டன் நேரத்திற்குக் கணிக்கப்பட்ட ஒரே கலண்டரை எல்லோரும் பாவிப்பது" என்பதாகும்.

10. அந்தந்த நாட்டு நேரப்படி கணித்த கலண்டரைப் பாவிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது என நினைக்கின்றேன். எமது முன்னோர் சமயக் கோட்பாடுகளுக்கூடாக வாழ்க்கை நெறியை மட்டுமல்ல நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்ற வழிமுறைகளை வேதங்களில் கூறப்பட்டுள்ள ஆத்ம வாக்கியங்கள் போன்று கூறிவைத்துள்ளார்கள். அவ்வாறு கூறப்பட்ட "**மருத்துவம் பிழைத்தால் வாகடத்தைப் பார், சாத்திரம் பிழைத்தால் கிரகணத்தைப் பார்**" என்னும் வாக்கியம், வாக்கிய பஞ்சாங்கத்தைப் பாவிப்பதா அல்லது திருக்கணித பஞ்சாங்கத்தைப் பாவிப்பதா என்ற கேள்விக்கு விடைகாணும் வழியை கூறியுள்ளது. 2015ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனில் ஏற்பட்ட சூரியகிரகணம் மேற்படி கேள்விகளுக்கு விடை தந்துள்ளது.

11. 2015 இல் இலண்டனில் காலை 9.30 இற்கு முழுமையான சூரியகிரகணம் நடைபெற்றதை நாம் காணக்கூடியதாக இருந்தது.

12. இலண்டனில் வினியோகிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான இலண்டன் நேரத்திற்குக் கணிக்கப்பட்டதாக எழுதியுள்ள மெய்கண்டான் கலண்டரிலோ, இலண்டன் நேரத்திற்குக் கணிக்கப்பட்டதாக எழுதியுள்ள லீலாபஞ்சாங்கக் கலண்டரிலோ, இலண்டன் நேரத்திற்குக் கணிக்கப்பட்டதாக எழுதியுள்ள தமிழ்த்தாய் நாட்காட்டியிலோ, வாக்கிய பஞ்சாங்க முறைப்படி இலண்டன் நேரத்திற்குக் கணித்து ஒரு ஆலயத்தால் வெளியிடப்பட்ட கலண்டரிலோ, வியாபார ஸ்தாபனங்களால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட மாதக் கலண்டரிலோ இச்சூரியகிரகணம் நடக்கப் போவதாகக் கூறப்படவில்லை.

13. 2015 ஆம் ஆண்டிற்கான திருக்கணித பஞ்சாங்க முறைப்படி லண்டன் நேரத்திற்குக் கணித்த ஸ்ரீ சிவசக்தி திருக்கணித கலண்டரில் " - - - மதியம் மு.ப. 09.31 - - - " இல் சூரியகிரகணம் நடைபெற இருப்பதாகப் போடப்பட்டிருந்தது.

14. லண்டனில் சூரியகிரகணம் தோன்றியபோது இலங்கை, இந்தியாவில் கிரகணம் தோன்றாத படியால் இலங்கை, இந்தியாவில் கணித்த கலண்டரை லண்டனில் பாவிக்கமுடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்திய கலண்டரைப் பின்பற்றும் ஆலயங்கள் கிரகணத்தின் போது பூட்டப்பட்டிருந்தன. ஆகவே இவ்விடையத்தில் மட்டும் இந்தியாவில் கணித்த கலண்டரை இவ் ஆலயங்கள் பின்பற்றவில்லை எனத்தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. இவற்றிலிருந்து பார்க்கும் போது திருக்கணித பஞ்சாங்க முறைப்படி லண்டன் நேரத்திற்குக் கணித்த **ஸ்ரீ சிவசக்தி திருக்கணித கலண்டர்** தான் லண்டனுக்குப் பொருத்தமானது என்னும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

16. ஒரு நாட்டிற்கான சூரிய உதய அஸ்தமன நேரங்களை **sunrisesunsetmap.com** என்னும் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இவற்றை வைத்து அந்த நாட்டிற்கான பஞ்சாங்கம், கலண்டரை கணித்து மக்களிடம் கொடுக்கும் போது எதுவித குழப்பமும் இல்லாமல் அந்த நாட்டில் உள்ள எல்லோரும் பண்டிகைகள், விழாக்களை ஒரே நாளில் கொண்டாடலாம். முக்கியமாக குழந்தை பிறந்த நேரத்தை வைத்து கணிக்கப்படும் குழந்தையின் ஜாதகத்தையும் சரியாகக் கணித்து எழுதலாம். இவ்விடையத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரும் முக்கியமாக ஆலயங்களின் நிர்வாகிகள், குருமார்கள், கலண்டர்களை அச்சடிப்பவர்கள், இறக்குமதி செய்யும், விற்கும் வர்த்தகர்கள் ஆகியோர் முயற்சித்து, வரும் காலச் சந்ததியினர் நம்பிக்கையுடன் எமது சைவசமயக் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் எவ்வித ஐயப்பாடுமின்றிக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை வகுப்பது சம்பந்தப்பட்ட எல்லோரினதும் கடமையாகும்.



சிவ வடிவம் - கஜாசுரசம்ஹார மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய விக்கிரகங்களின் தத்துவம்

## 1. சிவலிங்கம்

இறைவன் (சிவம்) ஆன்மாவின் மேல் உள்ள கருணையினால் ஆன்மாவை ஈடேற்றும் பொருட்டு எடுக்கும் வடிவங்களில் ஒன்று சிவலிங்கமாகும். லிங்கம் சிவனின் அருவுருவத் திருமேனியாகும். **சேக்கிழார்** சுவாமிகள் "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாக மணிந்தார்க்கு நிகழ் குறியாம் லிங்கம்" எனக் கூறியுள்ளார்.

சிவலிங்கம் என்பதன் பொருள் சிவம் - மங்களம், லிங்கம் - அடையாளம் மங்களத்தின் அதாவது சுபத்தின் அடையாளம் ஆகும்.

லிங்கம் என்பதின் பொருள் லி - லயம், கம் - தோற்றம். அதாவது எந்த இடத்தில் பிரளயகாலத்தில் பிரபஞ்சம் அனைத்தும் லயம் அடைந்து, படைப்புக் காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியாகின்றனவோ அதுவே லிங்கம் எனப்படும்.
சிவலிங்கம் அ+உ=ய, 8+2=10 அ-இறைவன், உ- சக்தி. சிவலிங்கம் சிவபஞ்சாட்சரச் சுடர் அருவ உருவமான நிலையில் யோகத்தின் சின்னமாக இருப்பதாகக் கூறுவர்.

ஐந்தொழிலும் இதில் அடங்கியதால் லிங்கம் எனப்பட்டது எனவும் கூறுவர். லிங்கம் ஆதாரபீடம் பிரம்ம பாகம் எனவும், ஆவுடையார் விஷ்ணு பாகம் எனவும், பாணம் ருத்திர பாகம் எனவும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் புரிபவர்களான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியமூவரையும் உள்ளடக்கிய பிரமாண்டம் என ஸ்ரீருத்திரம் கூறுகின்றது.

லிங்க புராணத்தில் லிங்கத்தின் மேற்பகுதி அண்டசராசரங்களையும், லிங்கத்தின் கீழ்ப்பகுதி அண்டசராசரங்களையும் தாங்கும் சக்தி எனவும் கூறப்பட்டுள்ளது.

லிங்கம் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்வதால் அடையாளம் எனவும் பொருள்படும். லிங்கம் என்பது சித்தரித்தல் எனவும் பொருள்படும்,

சிவலிங்கம் மேல்ப்பகுதி ஆகாயம், கீழ்ப்பகுதியான (ஆவுடையார் ) பூமி எனவும் கூடக் கொள்ளப்படுகிறது. இதை **திருமந்திரம்** பாடல் எண் 1725 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தரைஉற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாம்
திரைபொரு நீர்அது மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வான்உடு மாலை
கரைஅற்ற நந்தி கலையும் திக்காமே." எனக்கூறப்பட்டுள்ளது.

சிவலிங்கம் மேல்பகுதியாகிய லிங்கம் ஆண்தெய்வமாகவும் கீழ்ப்பகுதியான பீடம் (ஆவுடையார் ) சக்தி வடிவாகிய பெண் தெய்வமாகவும் கூடக் கொள்ளப்படுகிறது. இதை **திருமந்திரம்** பாடல் எண் 1770 இல்

"எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்த உரைத்து முறைசொல்லின் ஞானமாம்
சந்தித்து இருந்த இடம்பெரும் கண்ணியை
உந்தியின் மேல்வைத்து உகந்து இருந்தானே." எனக் கூறப்பட்டுள்ளது.

சிவலிங்கம் சிற்ப சாஸ்த்திர முறைப்படி 1.மேல்ப்பகுதி சிவன் பாகம் (நெருப்பு), சிவலிங்கம் ,சிவஜோதி 2.நடுப்பகுதி (ஆவுடையார்) விஷ்ணு பாகம் விஷ்ணுலிங்கம் (நீர்), அருட்சோதி 3.அடிப்பகுதி பிரம்மபாகம் பிரம்மலிங்கம் ஆத்மஜோதி (நிலம்) எனவும் கூறப்பட்டுள்ளது.

லிங்கம் பஞ்சாட்சர தத்துவத்தில் கீழ்ப்பாகம் - ந, நடுப்பாகம் - ம, மேல்ப்பாகம் - சி, நாதக்குளி - வ, லிங்கம் - ய. ஆகும்.

லிங்கத்தின் வடிமைப்புக்கு ஆலயங்களில் ஒதப்படும் மந்திர உச்சாடன அதிர்வலைகளை தன்னுள்ளே ஈர்த்து வைத்துக்கொள்ளும் ஆற்றல் உண்டு என தற்கால விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டுள்ளது.
சுவாமி விவேகானந்தர் 1900 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்த சமயங்களின் சரித்திரங்கள் என்னும் மகா நாட்டில் சிவலிங்கத்தை யுபஸ்தம்பம் அல்லது யுபகம்பம் அதாவது வேதங்களின் சாரங்களை அடிப்படையாகக் கொண்ட மகா பிரம்மத்தின் அடையாளச் சின்னம் எனக் கூறியுள்ளார்.

**திருமந்திரம்** ஆறு வகை லிங்கம் பற்றிப் பின்வரும் பாடல்கள் மூலம் கூறுகிறது.

1. **அண்டலிங்கம்** பாடல் எண் 1712

"இலிங்கம் அதுஆவது யாரும் அறியார்
இலிங்கம் அதுஆவது எண்திசை எல்லாம்
இலிங்கம் அதுஆவது எண்ணெண் கலையும்
இலிங்கம் அதுஆக எடுத்தது உலகே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தின் முழுமுதல் கடவுளான சிவபெருமானின் குறியீடு (அடையாளம்) சிவலிங்கம் என்பதை எவரும் உணர்ந்தாரில்லை. திக்கெட்டும் பரவி நிற்பதும், ஆய கலைகள் அறுபத்தினான்கும் சிவலிங்கமே. உலகம் முழுவதும் சிவ வடிவம், இச்சிவலிங்கமே சிவ வடிவமாகும்.

2. **பிண்டலிங்கம்** பாடல் எண் 1726

"மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே."

மனிதர்களின் உடம்பு (பிண்டம்) சிவலிங்கமாகும் (தலை - பாணம் - மேல்ப்பாகம், உடம்பு ஆவுடையார்) மனிதர்களின் உடம்பு கோயிலாகும். மனிதர்களின் உடம்பு சத்தியும் சிவனும் சேர்ந்த சதாசிவம். மனித உடம்பின் ஒவ்வொரு அசைவும் தில்லைச் சிற்றம்பலத் திருநடனமே ஆகும்.

3. **சதாசிவலிங்கம்** பாடல் எண் 1730

"கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கை இரண்டெட்டும் பரந்தெழும்
தேடும் முகம்ஐந்து செங்கண்ணின் மூவைந்து
நாடும் சதாசிவ நல்ஒளி முத்தே."

திருவருளோடு கூடிய பாதங்கள் இரண்டும் பூமியில் பொருந்த, அன்பர்கள் போற்றிப் பாடும், அருள் வழங்கும் திருக் கரங்கள் பத்தும் எட்டுத் திசைகளிலும், விண்ணிலும், மண்ணிலும் விரிந்து பரவி நிற்க, பக்தர்கள் வணங்கித் தொழத் தேடும் திருமுகங்கள் ஐந்தும், அருளொளி வீசும் கண்கள் பதினைந்தும் கொண்டு பக்தி செய்வார் விரும்பித் தேடும் சதாசிவமூர்த்தி, தேடிப் பணிவார் உள்ளத்துள் முத்தொளியாய் விளங்குவார்.

4. **ஆத்துமலிங்கம்** பாடல் எண் 1753

""அ"கார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
"உ"கார முதலாய் உயிர்பெய்து நிற்கும்
"அ"கார "உ"காரம் இரண்டும் அறியில்
"அ"கார "உ"காரம் இலிங்கம் அதாமே."

தன் உள்ளத்துள்ளே தோன்றி எழுகின்ற சோதிச் சுடரான ஆத்துமலிங்க ஒளியைக் காணலாம். வான் போல் விரிந்த உச்சித்தளம் அதுவே, ஐம்பது அக்கரங்களும் உதிக்கும் இடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் இதழ்கள் உடைய உச்சியில் (சகஸ்ரதளத்தில்) பொருந்தி இருக்கின்ற பொற்கொடியாகிய சக்தியுடன், "அ" கர முதல்வனான சிவப்பரம்பொருள் சேர்ந்து விளங்கும்.

5. **ஞானலிங்கம்** பாடல் எண் 1763

"உருவும் அருவும் உருவோடு அருவும்
மருவு பரசிவன் மன் பல்உயிர்க்கும்
குருவும் எனநிற்கும் கொள்கையன் ஆகும்
தருஎன நல்கும் சதாசிவன்தானே."

**கண்ணுக்குப்** புலப்படும் உருவத்தோற்றமாகவும், **கண்ணுக்குத்** தெரியாத அருவமாகவும், உருவமா அருவமா என்று நிச்சயிக்க இயலாதபடி அருஉருவமாகவும், கலந்து விளங்கும் பரம்பொருள், ஆருயிர்கள் அனைத்திற்கும் ஞானகுருவாக, நல்லாசிரியனாக நின்று வழிகாட்டும் இயல்புடையவன் ஆவான். எனவே வேண்டினவர் விரும்பி வேண்டியதை கற்பகதரு போலத் தந்தருள்பவன் சதாசிவப் பரம்பொருளாவான்.

6. **சிவலிங்கம்** பாடல் எண் 1773

"குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறுஇவை நீண்டு அகன்றானை
வரைத்து வலம் செய்யுமாறு அறியேனே."

ஒலி எழுப்பும் அலைகள் நிறைந்த கடல் சூழ்ந்த இந்த உலகமும், இதில் பொருந்தியுள்ள நீரும், விரைந்து பரவும் காற்றும், அக்காற்றில் தோன்றும் நெருப்பும், இந்த நான்கும் தங்கியிருக்கும் ஆகாயமும் ஆகப் பரந்து விரிந்து எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு வரையறைக்குள் வைத்து வழிபடுவது எப்படி என்றுதான் தெரியவில்லை.( இறைவன் உருவத்தில் அடங்கான், உள்ளத்துள் உணர்க என்பது பொருள்).

லிங்கம் மூவகைப்படும் எனவும் கூறுவர் அவையாவன

1.அவ்வியத்தலிங்கம் (நிட்களலிங்கம்) (பரநாதம்) (பரவிந்து),

2.வியத்தாவியத்தலிங்கம் (சிவலிங்கம்) (சதாசிவ வடிவம்) (அருஉருவத்திருமேனி) 3.வியத்தலிங்கம் (25 மகேசுவரவடிவங்கள்)

சிவலிங்கம் தூலலிங்கம், பத்திரலிங்கம், சூட்சுமலிங்கம் என மூவகைப்படும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. கருவறையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தானத்தில் இருப்பது தூலலிங்கமாகும். படிகலிங்கம், மரகதலிங்கம் என்பன மிகவும் சத்தியுள்ளவை எனக் கூறப்படுகிறது. மேலும் பரார்த்தலிங்கம், சுயம்புலிங்கம், கணலிங்கம், தெய்வீகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், சணிகலிங்கம், சகஸ்ரலிங்கம் ஆயிரம் முகம் கொண்ட பாணலிங்கம் முதல் ஐந்து முகம் கொண்ட பாணலிங்கம் வரை உள்ளது.

குற்றமற்ற முத்து, பவளம், வைடூரியம், படிகம், மரகதம், நீலம், மாணிக்கம், வைரம், கோமேதகம் ஆகிய இரத்தினங்களாலும் சிவலிங்கத்தை உருவாக்கலாம் எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன.
தென் இந்தியாவில் உள்ள ஐம்பூத ஸ்தலங்கள் (ஐம்பெரும் லிங்கங்கள்) 1.காஞ்சிபுரம் - நிலம், 2.திருவானைக்கா - நீர், 3.காளகஸ்த்தி - காற்று, 4.சிதம்பரம் - ஆகாயம், 5.திருவண்ணாமலை - நெருப்பு
12 இந்தியாவில் உள்ள 12 ஜோதிர்லிங்கங்கள் 1.இராமேஸ்வர் - இராமேஸ்வரம் (தமிழகம்), 2. மல்லிகார்ஜுனர் - ஸ்ரீசைலம் (ஆந்திரா), 3.பீமா சங்கர் – பூனா, 4.திரியம்பகேஷ்வரர் – நாசிக், 5.கிருஷ்ணேஷ்வரர் – ஔரங்காபாத் (மகாராஷ்டிரா), 6.சோமநாத் – வீராவல், 7.நாகேஸ்வரர் – துவாரகா (குஜராத்), 8.மகாகாலேஸ்வரர் – உஜ்ஜயினி, 9.ஓங்காரேஸ்வரர் – நர்மதா நதி தீர்த்தத்தில் உள்ள தீவு (மத்திய பிரதேசம்), 10.விஸ்வநாதர் – காசி (வாரணாசி) (உத்தர பிரதேசம்), 11.கேதார்நாத் – இமயமலை (இமயமலை), 12.வைத்யநாத் – தியோகர் (ஜார்கண்ட்).
இலங்கையில் உள்ள 5 ஈஸ்வரங்கள் 1.திருக்கோணேஸ்வரம் - திருகோணமலை, 2.திருக்கேதீஸ்வரம் - மன்னார், 3.முனீஸ்வரம் - புத்தளம், 4. நகுலேஸ்வரம் - கீரிமலை, 5. தொண்டேஸ்வரம் - தேவேந்திரமுனை (இறைவன் இறங்கிய துறை)- மாத்தறையில் உள்ள தெவிநுவர என்னும் இடம். இந்த ஆலயம் போத்துக்கீசரால் அழிக்கப்பட்டுப் பிற்காலத்தில் விஸ்ணுகோயிலாக மாற்றப்பட்டுள்ளது. இக்கோயில் பற்றிய குறிப்பு "யாழ்ப்பாணவைபவமாலை" என்னும் நூலிலும், கி.பி 2 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த புவியியலாளரான கிலோடியஸ் **தொலமி** என்பவரால் எழுதப்பட்ட கிரேக்க, ரோமர்களால் அறியப்பட்ட புவியியல் பற்றிய நூலிலும், 14 ஆம் நூற்றாண்டில் இலங்கை வந்த அரேபியர்களின் குறிப்புகளிலும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நடராஜர்

இறைவன் "**சிவாயநம**" என்கின்ற திருவைந்தெழுத்துக்களையே தனது திருமேனியாகக் கொண்டு உயிர்களின் பிறவித்துயர் நீங்குவதற்காக நடனம் புரியும் தோற்றமே நடராஜர் தோற்றமாகும். தூல ஐந்தெழுத்தில் (நமசிவாய) ந - திருவடி, ம - திருவயிறு, சி - திருத்தோள், வ - திருமுகம், ய - திருமுடி. சூக்கும ஐந்தெழுத்தில் (சிவாயநம) சி - உடுக்கை எந்திய திருக்கரம் படைத்தலையும், வா - வீசிய இடது திருக்கரம் அருளலையும், ய - வலது அபய கரம் காத்தலையும், ந - நெருப்பை ஏந்திய இடது திருக்கரம் அழித்தலையும், ம - முயலகனைக் கீழே அழுத்தும் திருவடி மறைத்தலையும், திருவாசி "ஓம்" என்னும் பிரணவத்தையும், அதில் உள்ள ஒளிச்சுடர்கள் "ஓம்" என்ற நாதப்பிரம்மத்தின் விரிவான 51 எழுத்துக்களையும் குறிக்கும். இவற்றை "**உண்மை விளக்கம்**" பாடல் எண் 31 இல்

> "எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
> நட்டம் புதல்வா நவிலக்கேள் – சிட்டன்
> சிவாயநம என்னும் திருவெழுத்தஞ் சாலே
> அபாயமற நின்றாடு வான்." எனவும்

"**உண்மை விளக்கம்**" பாடல் எண் 32 இல்

> "ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
> நாடும் திருவடியி லேநகரம் – கூடும்
> மகரம் உகரம் வளர்தோள் சிகரம்
> பகருமுகம் வாமுடியப் பார்." எனவும்

"**உண்மை விளக்கம்**" பாடல் எண் 33 இல்

> "சேர்க்கும் துடிசிகரம் சிற்கனவா வீசுகரம்
> ஆர்க்கும் யகரம் அபயகரம் – பார்க்கிலிறைக்கு
> அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
> தங்கும் மகரமது தான்." எனவும்

"**உண்மை விளக்கம்**" பாடல் எண் 34 இல்

> "ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
> நீங்கா எழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்
> அற்றார் அறிவர்அணி யம்பலத்தான் ஆடலிது
> பெற்றார் பிறப்பற்றார் பின்."எனவும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜரின் நான்கு விதமான நடனங்கள் நான்குவித ஆன்மாக்களுக்காக நடாத்தப்படுவதை குறிக்கின்றன.

1. **ஊனநடனம்** (மோக காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் படைத்தல் உடுக்கை ஏந்திய திருக்கரம், காத்தல் அமைந்த திருக்கரம், அழித்தல் அக்கினி ஏந்திய திருக்கரம், மறைத்தல் அழுத்தமாக ஊன்றிய திருவடி, அருளல் தூக்கிய திருவடி ஆகியவற்றால் குறிக்கப்படுகின்றன.
2. **ஞானநடனம்** (முத்தி காமிகளுக்காக நிகழ்த்தப் பெறுவது) இதில் உடுக்கை ஏந்திய திருக்கரம் மாயாமலத்தை நீக்குவதற்கும், அக்கினி ஏந்திய திருக்கரம் கன்ம மலத்தைச் சுடுவதற்கும், ஊன்றிய திருவடி ஆணவமலத்தை அடக்குவதற்கும், தூக்கிய திருவடி பேரின்பம் அருளுவதற்கும், அமைந்த திருக்கரம் பேரின்பத்தில் ஆன்மாவை அழுத்தம் செய்வதற்கும் பயன்படுகின்றன,
3. **ஆனந்தநடனம்** ((மும்மலம் நீக்கி வீடு பேறு அளிக்கும்) இதில் டமருகம் ஏந்திய திருக்கரம் துடியை அசைத்தல் பக்குவம் எய்திய ஆன்மாவின் உணர்விலிருந்து மாயையை உதறி விலக்குவதையும், ஓம அங்கி எனப்படும் அக்கினியை ஏந்திய திருக்கரம் ஆன்மாவின் தொல் வினைகளாகிய கன்மவினைகள் முளையாதவாறு சுடுவதையும், ஊன்றிய திருவடி ஆணவம் மேலிடாமல் அதன் இரு ஆற்றல்களான ஆவாரக சக்தியையும் (ஆணவம் ஆன்மாவை மறைக்கும் செயலையும்) அதோநியாமிகா சக்தியையும் (கீழ் விழ்த்தும் செயலையும்) கெடுத்து ஆணவ ஒடுக்கம் ஏற்படச் செய்வதையும், தூக்கிய திருவடி சகல, கேவல நிலைகளில் சுழன்று வந்த உயிரை அதிலிருந்து விடுவித்து அதில் மீளாதபடி துரிய அருள் நிலைக்கண் தூக்கி நிறுத்தி உய்விப்பதையும், அவ்வெடுத்த திருவடியின் குஞ்சித (வளைந்த) நிலையும் அதற்கொப்ப அப்பாதத்தைக் காட்டும் திருக்கையும், நில் என்னும் பாணியிலும் உடனாக அருகில் இருக்கிறேன் என்ற பாணியிலும் அமைந்த அபய கரமும், துரியாதீதம் என்னும் ஆனந்த நிலையில் ஆன்மாவை அழுத்தும் குறிப்பாக அமைந்து பெருங்கருணைப் பெருக்கால் அபயகரத்தால் பேரானந்தக் கடலில் ஆன்மா மூழ்கடிக்கப்படுவதையும் பாவனை செய்கிறது.
4. **பெருநடனம்** (சீவன் முத்தருக்காக நிகழ்த்தப் பெறுவது) பிறப்பறுப்பதற்காக நிகழ்த்தப்பெறுவது.திருநடனக் காட்சி பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அருளாளர்களின் கூற்றைப் பார்ப்போமானால் **சேக்கிழார் பெருமான்**

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமாம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி."

**அப்பர் பெருமான்**

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

**மாணிக்கவாசகப் பெருமான்** திருவாசகத்தில் இடையில்

..நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே ...

**திருமூலர் பெருமான்** திருமந்திரம் பாடல் எண் 77 இல்

"மாலாங்கனே இங்கு யான் வந்த காரணம்
நீலாங்க மேனியன் நேரிழையாள் ஒடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே."

**திருமூலர் பெருமான்** திருமந்திரம் பாடல் எண் 2746 இல்

"காளியோடு ஆடி கனகாலசத்து ஆடிக்
கூளியோடு ஆடி குவலயத்தே ஆடி
நீளியநீர் தீகால் நீள்வான் இடைஆடி
நாள்உற அம்பலத்தே ஆடும் நாதனே."

மேலும் சடாமுடி ஞானத்தின் அடையாளமாகவும், பிறை பேரறிவையும், கங்கை அளவில்லாத ஆற்றலையும், ஊமத்த மலர் விருப்பு வெறுப்பற்ற தன்மையையும், திருநீலகண்டம் அருளாற்றலையும், முக்கண் சூரியன், சந்திரன், தீயையும், பூநூல் காயத்திரியையும், திருநீறு பராசக்தியையும் குறிக்கும் இத்தத்துவங்களை அறிந்து நாம் இறைவனை வழிபடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசர் நடனமாடிய ஐந்து இடங்களாவன 1.பொன்னம்பலம் (கனகசபை)-ஆனந்ததாண்டவம் - சிதம்பரம், 2.வெள்ளியம்பலம் (வெள்ளிச்சபை)-ஊர்த்தவதாண்டவம் - மதுரை, 3.இரத்தினம்பலம் (இரத்தினசபை) - திருவாலங்காடு, 4.தாமிரஅம்பலம்(தாமிரசபை)-திருநெல்வேலி, 5.சித்திரம்பலம்(சித்திரசபை)-குற்றாலம்

## 3. பராசக்தி

இறைவன் (சிவம்) ஆன்மாக்களின் மேல் கொண்ட கருணையினால் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு தான் செயல்ப்படுவதற்காகச் சக்தியாகத் திருமேனி கொள்கிறான்.

**திருக்களிற்றுப் படியார்** பாடல் எண் 1 இல்

"அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் – அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்" எனக் கூறியுள்ளார்.

1.இக்கூற்றுக்கு வலுச்சேர்ப்பதுபோல இந்தியாவில் பின் வரும் இடங்களில் லிங்க வடிவில் பராசக்தி காணப்படுகிறாள். தமிழகத்தில் மயிலாடுதுறையில் அனவித்யா எனவும், 2.படவேட்டில் ரேணுகாபரமேஸ்வரியாகவும், 3.கொங்குநாட்டில் பன்னாரிஅம்மனாகவும், 4.கர்நாடகத்தில் மிக முக்கிய சக்தி பீடமாகத் திகழும் (அர்த்தநாரி பீடம்) கொல்லூரில் மூகாம்பிகை எனவும், 5.மங்களூரில் கடில்துர்க்காபரமேஸ்வரி எனவும், 6.உத்தரப்பரதேசத்தில் நைமிசாரண்யத்தில் லிங்க தாரணி எனவும் நிலைபெற்றுள்ளாள்.

இறைவன் (சிவம்) தான் கொண்ட திருமேனியாகிய பராசக்திக்கூடாக முத்தொழிலையும் புரிவதற்காக பிரம்மா, விஷ்ணு, உருத்திரனாக திருமேனி கொள்கிறான். இதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமந்திரம்** பாடல் எண் 401 இல்

"அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம் அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே." எனவும்

**திருமந்திரம்** பாடல் எண் 402 இல்

"வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி யானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே."எனவும் கூறப்பட்டுள்ளது.

பராசக்தி உருவ வழிபாட்டில் மட்டும் அல்லாமல் அருவுருவமாகவும் வழிபடப்படுகின்றாள். அதாவது யந்திர வழிபாடும், ஸ்ரீசக்கர வழிபாடும் ஆகும். இதை மேற்கூறிய முதல் பாடல் விளக்குகிறது.
யாழ்ப்பாணம் அராலி முத்துமாரி அம்மன் ஆலய மூலஸ்தானத்தில் விக்கிரகம் இல்லை. பீடம் (அருவுருவம்) முத்துமாரியம்மனாக வழிபடப்படுகின்றது.

**இருக்கு வேதம்** தேவீ சூக்தம் தேவீ, தானே எல்லாமாய் இருந்து உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருள் புரிவதை தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது. **அதர்வண வேதம்** பராசக்தியின் ஆற்றலை விளக்கிக் கூறுகிறது. **யஜுர் வேதம்** பராசக்தியின் பல வடிவங்களை வர்ணிக்கின்றது.

பராசக்தி மூலமே இவ் உலக இயக்கம் எல்லாம் நடைபெறுவதால் சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு **சாக்தம்** என்னும் சமயம் தோன்றியது. பிற்காலத்தில் இச்சமயத்தைப் பின்பற்றும் பலர் சைவசமயத்துடன் ஐக்கியமாகிவிட்டனர்.

பராசக்தி சிவத்துடன் சக்தியாகவும், நாதத்துடன் விந்தாகவும், சதாசிவனுடன் மனோன்மணியாகவும், மகேசனுடன் மகேசையாகவும், உருத்திரனுடன் உமையாகவும், திருமாலுடன் திருமகளாகவும், அயனுடன் கலைமகளாகவும் தோற்றமளிக்கிறாள்,

இவ்வுண்மையை **சிவஞானசித்தியார்** சுப்பக்கம் பாடல் எண் 165 இல்

"சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
ஒத்துறும் மகேசை ஆகி உமை திரு வாணி ஆகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துறும் சிவாதிக்கு இங்ஙனம் வரும் சத்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்."

எனக் கூறப்பட்டுள்ளது

இதை பின் வரும் **திருமந்திரம்** பாடல் எண் 402 இலும் வலியுறுத்தப்படுகின்றது.

"வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி யானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே."

மேலும் பராசக்தி 51 சக்தி பீடத்திலும் வெவ்வேறு பெயர்கள் மூலம் அழைக்கப்படுகிறாள். சிதம்பரத்தில் சிவகாமி, திருவேற்காட்டில் கருமாரி, சமயபுரத்தில் மாரிஅம்மன் எனவும், பரமேஸ்வரனுடன் பார்வதி ஆகவும், தட்சாயினி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி எனவும் அவளின் நாமங்கள் தொடர்கின்றன.,

## பராசக்தியின் 51 **சக்திபீடங்கள்**

இந்தியாவில் தமிழ்நாடு 1.காஞ்சிபுரம் (காமகோடி பீடம்) காமாக்ஷி, 2.மதுரை (மந்த்ரிணீ பீடம், மனோன்மணி பீடம்) மீனாக்ஷி (மந்த்ரிணீ, இராஜமாதங்கி) 3.திருஆனைக்கா (தண்டினீ பீடம், ஞானபீடம்) அகிலாண்டேஸ்வரி (மஹாவாராகி, ஸ்ரீதேவி, தண்டநாதா) 4.ராமேஸ்வரம் (ஸேது பீடம்) பர்வதவர்த்தினி, 5.பாபநாசம் (விமலா பீடம்) விமலை (உலகநாயகி), 6.திருவாரூர் (கமலை பீடம்) கமலாம்பாள், 7.கன்யாகுமரி (குமாரி பீடம்) குமாரி, 8.திருவையாறு (தர்ம பீடம்) தர்மஸம்வர்த்தினி, 9.திருவண்ணாமலை (அருண பீடம்) அபீதகுசாம்பாள், 10.திருக்கடவூர் (கால பீடம்) (அஸ்டவீரட்டானம்) அபிராமி, 11.திருக்குற்றாலம் (பராசக்தி பீடம், யோகபீடம்) பராசக்தி, 12.கும்பகோணம் (மந்திர சக்தி பீடம்) ஸ்ரீமங்களாம்பிகை, 13.தேவிப்பட்டினம் (வீரசக்தி பீடம்) மகிஷமர்த்தினி, 14.திருவெண்காடு (ப்ரணவ பீடம்) ப்ருஹ்ம வித்யா, 15.திருநெல்வேலி (காந்தி பீடம்) காந்திமதி, 16.திருவொற்றியூர் (இக்ஷ பீடம்) திரிபுரசுந்தரி, 17.திருவாலங்காடு (காளி பீடம்) மகாகாளி, 18.ஈங்கோய்மலை(திருச்சி) (சாயா பீடம்) ல்லிதா கேரளா 19.நந்திபுரம் (கல்யாணி பீடம், பகவதி பீடம்) நந்தினி (ஹேமாம்பிகை) கர்நாடகா 20.கொல்லூர் (அர்த்தநாரி பீடம்) மூகாம்பிகை, 21.மைசூர் (சம்ப்ரதாய பீடம்) சாமுண்டி, 22.கோகர்ணம் (கர்ண பீடம்) பத்ரகர்ணி, ஆந்திரா 23.காளகஸ்த்தி (ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடம்) ஞானப்ரஸுந்தாம்பிகை, 24.த்ராக்ஷாராமா (மாணிக்க பீடம்) மாணிக்காம்பாள், 25.ஸ்ரீசைலம் (ஸ்ரீசைல பீடம்) பிரமராம்பாள், மகராஷ்டிரம் ((மும்பை) 26. கோலாப்பூர் (கரவீர பீடம்) மஹாலஷ்மி, 27.த்ரியம்பகம் (திரிகோண பீடம்) த்ரியம்பகதேவி, 28.துள்ஜாபுரம் (உத்பலா பீடம்) பவானி, ஒரிசா 29. பூரி (பைரவி பீடம்) பைரவி, குஜராத் 30.ஸோமநாதம் (ப்ரபாஸர பீடம்) சந்திரபாகா, 31.அம்பாஜி (பிருந்தாவனம்) (துவாரகை) ((முத்தி பீடம்) குமாரி (பத்ரகாளி), ம.பி. 32.மஹாகாளம் (மஹோத்பலா பீடம்) சங்கரி, 33.உஜ்ஜயனி (ருத்ராணி பீடம்) மஹாகாளி, ராஜஸ்தான் 34.புஷ்கரம் (காயத்ரீ பீடம்) காயத்ரி, உ.பி. 35.காசி (மணிகர்ணிகா பீடம்) விசாலாஷி, 36.வைதரணி (விரஜா பீடம்) விரஜை, மே.வ. 37.கல்கத்தா (உக்ரசக்தி பீடம்) காளி, பீகார் 38.கயா (திரிவேணி பீடம்) மந்திரிணி, பஞ்சாப் 39.ஜாலந்திரம் (ஜாலந்திர பீடம்) திரிபுரமாலினி, ஹரியானா 40.ஹஸ்திணாபுரம் (ஜெயந்தி பீடம்) முக்திநாயகி, 41.குருக்ஷேத்ரம் (உபதேச பீடம்) ஸ்தாணுப்பிரியை, இ.பி. 42.நாகுலம் (தேவிகா தடம்) (உட்டியாண பீடம்) நகுலேஸ்வரி, 43.ருத்ரகோடி (கேதாரம்) (ருத்ரசக்தி பீடம்) மார்க்கதாயினி (கௌரி), 44.நீலபர்வதம் (சிம்லா) (ச்யாமளா பீடம்) நீலாம்பிகை, 45.ப்ரயாகை (ப்ரயாகை பீடம்) லலிதா, அஸ்ஸாம் 46.காமரூபம் (காமகிரி பீடம்) காமரூபிணி, மிர்ஜாப்பூர் 47.விந்தியாசலம் (விந்தியாசல பீடம்) நந்தாதேவி, காஷ்மீர் 48.ஸ்ரீநகர் (ஜ்வாலாமுகி பீடம்) ஜம்புநாதேஸ்வரி, 49.அம்பத்தூர் (வைஷ்ணவி பீடம்) வைஷ்ணவி, நேபாளம் 50.பசுபதி – காட்மாண்ட் (சக்தி பீடம்) பவானி, திபெத் 51.மானஸரொவர் (த்யாக பீடம்) தாக்ஷாயனி.

சக்தி பீடங்கள் 51 உடன் வேறு சிலவும் சேர்ந்து 64 ஆகவும் அத்துடன் இன்னும் சில சேர்ந்து 108 உம் கூட உள்ளது எனவும் கூறுவர்.

## 4. விநாயகர்

இறைவன் (சிவம்) ஓசை வடிவமாக, பிரணவ வடிவமாக, "ஓம்" வடிவமாக வந்தபோது விநாயகர் என அழைக்கப்படுகின்றார். அவர் 1.கணபதி (பூதகணங்களுக்கெல்லாம் அதிபதி), 2.ஆனைமுகன் 3.கஜமுகன் (ஆனை முகத்தை உடையவர்), 4.விக்கினேஸ்வரன் (விக்கினங்களைத் தீர்க்கும் ஈஸ்வரன்) 5.பிள்ளையார் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் ஞானவடிவானவர். ஆன்மாக்களுக்கு ஞானத்தை அருளுபவர் அவரின் **முகத்தோற்றம்** – "ஓ" ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைக் காட்டுகிறது.

**திருவடி** – ஞானம் இதுவே ஆன்மாவைப் பொருந்தி நின்று மலங்களைத் தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது.

**பெருவயிறு** – எல்லா உலகங்களும், உயிர்களும் இதற்குள் அடக்கம் எனக் குறிக்கிறது.

**கொம்புகள்** – மகாபாரதத்தை எழுதுவதற்காக கொம்பை உடைத்து வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**பெரிய செவிகள்** – எல்லாவற்றையும் கேட்டு நல்லனவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**ஐந்துகரங்கள்** – 1. பாசத்தை ஏந்திய கரம் படைத்தலையும், 2. தந்தம் ஏந்திய கரம் காத்தலையும், 3. அங்குசம் ஏந்திய கரம் அழித்தலையும், 4. மோதகம் ஏந்திய கரம் அருளலையும் 5. துதிக்கை அனுக்கிரகம் செய்வதையும் குறிக்கின்றன. இதன்மூலம் சிவம் செயல்படுத்துவது போல பிள்ளையாரும் பிரபஞ்ச இயக்கத்தை செய்வதாகக் கருதி பிள்ளையாரும் சிவமும் ஒன்று என்னும் தத்துவத்தை வலியுறுத்துகிறது. இத்தத்துவத்தின் அடிப்படையில் கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு **காணாபத்தியம்** என்னும் சமயம் உருவாகியது. பிற்காலத்தில் இச்சமயம் சைவசமயத்துடனும், வைஷ்ணவ சமயத்துடனும் ஐக்கியமாகிவிட்டது. புராணங்களில் பிள்ளையார் சிவன், பார்வதிதேவியின் மூத்த பிள்ளையாகவும், முருகனின் அண்ணனாகவும் கூறப்பட்டுள்ளது. மூஷிகம் இவரின் வாகனமாகக் கொள்ளப்படுகின்றது. **கணேசபுராணம்** இவரின் சரித்திரத்தைக் விரிவாகக் கூறுகிறது. விநாயகர் வழிபாடு சைவ சமயத்தில் மட்டுமல்லாமல் வைஷ்ணவம், பௌத்தம், சமண மதங்களிலும் உள்ளது.

"உ" என்னும் உகரம் **பிள்ளையார் சுழி**யாக எழுதப்படுகின்றது. சைவசமயத்தவர்கள் எந்தவொரு விடையத்தையும் எழுதத்தொடங்கும் போதும் பிள்ளையார் சுழி போட்டே தொடங்குவது மரபாக இருந்தது. இவ்வாறே எந்த ஒரு காரியத்தைத் தொடங்கும் போதும் மஞ்சள், குங்குமம், சந்தணம், வெல்லம், பசுவின் சாணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுமண் போன்றவற்றால் பிள்ளையாரைப் பிடித்து வைத்து அவரை வணங்கியே அக்காரியம் தொடங்கப்படுகின்றது.

பிள்ளையார் பின்வரும் பல மூர்த்தங்களில் காட்சியளிக்கின்றார். 1.நர்த்தன கணபதி, 2.நடன கணபதி, 3.நரமுக கணபதி, 4.சித்தி புத்தி கணபதி, 5.வாதாபி கணபதி ஆகியவற்றுடன் மேலும் 32 மூர்த்தங்கள் உள்ளன, அவையாவன 1.உச்சிட்ட கணபதி, 2.உத்தண்ட கணபதி, 3.ஊர்த்துவ கணபதி, 4.ஏகதந்த கணபதி, 5.ஏகாட்சர கணபதி, 6.ஏரம்ப, கணபதி 7.சக்தி கணபதி, 8.சங்கடஹர கணபதி, 9.சிங்க கணபதி, 10.சித்தி கணபதி, 11.சிருஸ்டி கணபதி, 12.தருண கணபதி, 13.திரயாஷர கணபதி, 14.துண்டி கணபதி, 15.துர்க்கா கணபதி, 16.துவிமுக கணபதி, 17.துவிஜ கணபதி, 18.நிருத்த கணபதி, 19.பத்தி கணபதி, 20.பால கணபதி, 21.மஹா கணபதி, 22.மும்முக கணபதி, 23.யோக கணபதி, 24.ரணமோசன கணபதி, 25.லட்சுமி கணபதி, 26.வர கணபதி, 27.விக்ன கணபதி, 28.விஜய கணபதி, 29.வீர கணபதி, 30.ஹரித்திரா கணபதி, 31.க்ஷிப்ர கணபதி, 32.க்ஷிப்ரபிரசாத கணபதி.

ஆலயங்களுக்கு நாம் செல்லும் போது முதலில் பிள்ளையாரை வணங்கிய பின்பே மூலவரையும், மற்ற பரிவார மூர்த்தங்களையும் வணங்கவேண்டும்.

பிள்ளையாரை வணங்கி ஒரு செயலைத் தொடங்கினால் அச்செயல் வெற்றியில் முடியும் என்பது ஐதீகம். பின்வரும் பாடல்கள் போலப் பெரும்பாலான சமய நூல்கள் எல்லாவற்றிற்கும் காப்புச் செய்யுள் அல்லது கடவுள் வாழ்த்துக்கள் அமைந்துள்ளன.

**திருமந்திரம்** காப்புச் செய்யுளில்

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே"

**சிவஞானசித்தியார்** காப்புச் செய்யுள் பரபக்கம் பாடல் இல. 1 இல்

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுபகல் உணரவோர் சிந்தைத்
திருகு ஓட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யும் தேவே."

**திருவருட்பயன்** காப்புச் செய்யுளில்
"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்."

**சிவப்பிரகாசம்** பாடல் எண் 3 இல்
"நலந்தரநூல் இருந்தமிழின் செய்யுட் குற்றம்
நண்ணாமை இடையூறு நலியாமை கருதி
இலங்குமிரு குழையருகு பொருதுவரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்தகயல் கண்ணியொடும் இறைவன்
கலந்தருள வரும்ஆனை முகத்தான் மும்மைக்
கடமருவி எனநிலவு கணபதியின் அருளால்
அலந்துமது கரமுனிவர் பரவவளர் கமலம்
அனையதிரு அடியிணைகள் நினைதல் செய்வாம்."

**திருவிளையாடற் புராணம்** காப்புச் செய்யுளில்
"சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே."

14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் **நல்வழி**யில் கடவுள் வாழ்த்தில்
"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா."

## 5.முருகன்

முருகு என்னும் சொல் அழகு, இளமை எனப் பொருள்படும். இறைவன் (சிவம்) உயிர்களுக்கு அருளும் பொருட்டு அறிவு வடிவாக, ஒளி வடிவாக எடுத்த ஒரு வடிவமே முருகன் ஆகும். இதனால்தான் அருவுருவமாக ஆழ்ந்து, அகன்று, நுண்ணியதாக இருக்கின்ற வேலை முருகனாக வணங்குகின்றோம். இதன் காரணமாகத்தான் சிவாலயத்தைத் தவிர முருகனின் ஆலயகோபுரங்களில் மட்டும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சிவ சிவ"** என்னும் மந்திரம் எழுதப்படுகின்றது. சிவமும் முருகனும் ஒன்றே என்பதை **கந்தபுராணம்** பின்வரும் பாடல்கள் மூலம் விளக்குகிறது. முருகனே கந்தபுராணம் பாட கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு காஞ்சி குமரகோட்டத்தில் "திகடச்சக்கர' என அடிஎடுத்துக் கொடுத்துள்ளார்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய."

மேலும் வேலைப்பற்றி
"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த அன்பால்
எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்
தந்திடும் பனுவல் சொன்ன தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக்கவலை தீர்த்தோம்,"
சிவனுக்குள்ள ஈசானம், தட்புருடம், வாமம், அகோரம், சத்யோசாதம், அதோமுகம் என்ற ஆறு முகங்களே ஆறுமுகனாகத் தோன்றியதைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. முருகனிடமுள்ள ஞானவேலை இறை சிந்தனையைத் தவிர வேறு ஒரு சிந்தனையும் அற்ற அகச்சுத்தத்துடன் வணங்கும் பொழுது மலம் நீங்கிவிடும். இதனால் சிவப்பரம்பொருளின் இறை அருள் பெற சிவத்திடம் கூறும் சூக்கும பஞ்சாட்சர மந்திரமான **"சிவாயநம"** வை முருகனிடமும் கூறலாம் எனக் கூறப்படுகின்றது.

முருகனை முழுமுதற் கடவுளாக ஏற்று **கௌமாரம்** என்னும் சமயம் தோன்றியது. பிற்காலத்தில் இது சைவசமயத்துடன் ஐக்கியமாகிவிட்டது.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் 5 வயதுவரை ஊமையாக இருந்த **குமரகுருபரர்** திருச்செந்தூர் முருகன் காட்டிய பூவைப் பார்த்து "பூமருங்கும் எனத் தொடங்கிப் பாடிய முருகன் வரலாறு கூறும் **கந்தர் கலி வெண்பாவில்** பின் வருமாறு கூறுகின்றார்

"சத்ரு சம்ஹாரத்திற்கு ஒரு முகம்
முக்தி அளிக்க ஒரு முகம்
ஞானம் அருள ஒரு முகம்
அக்ஞானம் அழிக்க ஒரு முகம்
சக்தியுடன் இணைந்து அருள ஒரு முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களுக்கு அருள ஒரு முகம்."

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் உயிரை துறக்க கோபுரத்திலிருந்து வீழ்ந்த **அருணகிரிநாதரை** ஏற்று "முத்தைத் தரு" என அடி எடுத்துக் கொடுத்த முருகனைப் பற்றி அருணகிரிநாதர் பின்வருமாறு பாடியுள்ளார்

"ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீஅருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே."

முருகனைப்பற்றி **சிவப்பிரகாசம்** பாடல் எண் 4 இல்

"வளநிலவு குலம்அமரர் அதிபதியாய் நீல
மயிலேறி வரும்ஈசன் அருள்ஞான மதலை
அளவில்பல கலைஅங்கம் ஆரணங்கள் உணர்ந்த
அகத்தியனுக்கு ஒத்துரைக்கும் அண்ணல் விறல்எண்ணா
உளமருவு சூரன்உரம் எனதிடும்பை ஓங்கல்
ஒன்றிரண்டு கூறுபட ஒளிதிகழ்வேல் உகந்த
களபமலி குறமகள்தன் மணிமுலைகள் கலந்த
கந்தன்மலர் அடியிணைகள் சிந்தை செய்வாம்."

எனக் கூறப்பட்டுள்ளது..

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் (ஔவையார் என்ற பெயரில் காலத்திற்குக் காலம் 5, 6 பேர் வாழ்ந்துள்ளார்கள்) வாழ்ந்த ஔவையாருக்குக் காட்சி கொடுத்த முருகன் கேட்ட உலகில் அரியது, பெரியது, இனியது, கொடியது எது என்ற கேள்விகளுக்குக் கூறிய பதில்கள் பாடல்களாக உள்ளன.

முருகனை ஆறுமுகனாகவும், வள்ளி, தெய்வானையுடனும், ஆண்டியாகவும் தத்துவார்த்தமாகச் சித்தரித்துள்ளார்கள். அதாவது ஆறுமுகம் மூலம் சிவம் தான் முருகன் எனவும், இச்சாசக்தியை (ஆசை) வள்ளியாகவும், ஞானாசக்தியை (அறிவு) முருகனாகவும், கிரியாசக்தியை (செயல்) தெய்வானையாகவும், ஞானத்தை வேலாகவும், இறைஅடி சேர்ந்த ஆன்மாவை மயிலாகவும், குண்டலினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியை பாம்பாகவும் உருவகப்படுத்தியுள்ளார்கள். மொத்தத்தில் உயிர்கள் இல்லறத்தில் போகங்களை அனுபவித்தும் ஞானம் பெறலாம் எனக்கூறப்பட்டுள்ளது. ஆண்டியாக உருவகப்படுத்தி துறவறத்தில் இருந்து தவம் இயற்றி ஞானம் பெறலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

புராணங்களில் முருகனை சிவன் பார்வதி ஆகியோரின் மகன் எனவும், பிள்ளையாருக்குத் தம்பி எனவும் கூறப்பட்டுள்ளது, முருகன் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார், அவையாவன ஆறுமுகன், சரவணபவன், சுப்பிரமணியன், கார்த்திகேயன், குகன், குமரன், வேலன், குருபரன், காங்கேயன், கந்தன், கடம்பன், மயில்வாகனன், வேலவன், செவ்வேள், ஸ்வாமி, சுரேசன், சேந்தன், சேயோன், விசாகன், முத்தையன், சோமஸ்கந்தன் என்பனவாகும். இந்தியாவின் வட மாநிலங்களில் முருகனை கார்த்திகேயன் என்றே அழைக்கின்றனர். பௌத்தர்கள் ஸ்கந்த என அழைக்கின்றனர்.
முருகன் தமிழ்க் கடவுள் என அழைக்கப்படுகின்றான். அத்துடன் குறிஞ்சி நில (மலையும் மலை சார்ந்த இடமும்) கடவுளாக சேயோன் எனவும் போற்றப்படுகின்றான். "முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்" என அருணகிரிநாதர் கூறியுள்ளார்.

ஆறுபடை வீடுகள் 1. திருப்பெரும் குன்றம் (தெய்வானையை மணந்த திருத்தலம், 2.திருச்செந்தூர் (சூரபத்மனை போரில் வென்ற திருத்தலம்), 3.பழநி (மாங்கனிக்காக விநாயகரோடு போட்டியில் தோற்று தண்டாயுதபாணியாக நின்ற திருத்தலம்), 4.சுவாமிமலை (சிவனுக்குப் பிரணவ மந்திரத்தை ஓதி தகப்பன்சுவாமியாக காட்சிதரும் திருத்தலம்), 5.திருத்தணி (வள்ளியை மணந்த திருத்தலம்), 6.பழமுதிர்ச்சோலை (ஔவைக்கு நாவல்ப்பழம் உதிர்த்துக் காட்சி கொடுத்த திருத்தலம்).

## 6. தட்சணாமூர்த்தி

இறைவன் ஞானாசிரியனாகக் கல் ஆலமரத்திற்குக் கீழ் அமர்ந்து அகச்சந்தான குரவர்களாகிய 1.சனகர், 2.சனந்தனர், 3.சனாதனர், 4.சனற்குமாரர். ஆகிய நான்கு முனிவர்களுக்கு உபதேசம் செய்யும் தோற்றமாகும். தட்சிணம் என்ற சொல் தெற்கு, ஞானம், சாமர்த்தியம் எனப் பொருள்படும். ஆலயங்களில் தட்சணாமூர்த்தி விக்கிரகம் தெற்கு நோக்கியே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“**திருவிளையாடற் புராணம்** பாடல் எண் 14 இல் (கடவுள் வாழ்த்து) பரஞ்சோதி முனிவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

“கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆறங்க முதற்கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைத்து பவத்தொடக்கை
வெல்லாம்”

தட்சணாமூர்த்தியை நாம் ஞானத்தால் தொழ வேண்டும். அவர் எங்களை எல்லாம் தனது மோனத்தால் அழைத்து சிவஞானத்தைத் திருநோக்காலே தந்தருளுகின்றார் இவரது வடிவமே தத்துவ விளக்கமாக அமைந்துள்ளது.

1. திருமேனி பளிங்கு போன்ற வெண்ணிறம் - தூய்மையை உணர்த்துகின்றது.
2. திருக்கரத்தில் உள்ள நூல் - இது சிவஞானபோதமாகும். ஞானங்கள் அனைத்தும் தன்னுள் அடக்கம் எனக் கூறி அந்த ஞானத்தாலேயே வீடு பேறு கிடைக்கும் என உணர்த்துகின்றது.
3. சின்முத்திரை - உயிரானது (சுட்டுவிரல்) மும்மலங்களிலிருந்து (நடுவிரல் – ஆணவம், மோதிரவிரல் – கன்மம், சின்னவிரல் – மாயை) நீங்கி இறைவன் திருவடியை (பெருவிரலின் அடிப்பாகம்) அடைவதை உணர்துகின்றது.
4. வலப் பாதம் முயலகனை மிதித்தமர்ந்திருத்தல் - அனைத்துத் தீமைகளையும் அடக்கி ஆளும் வலிமையை உணர்த்துகின்றது.
5. புலித்தோல் – தீயசக்தியளை அடக்கி ஆளும் பேராற்றலை உணர்த்துகின்றது.
6. ஆலமரமும் அதன் நிழலும் – மாயையையும், அதன் காரியமாகிய உலகத்தையும் உணர்த்துகின்றது.
7. திருக்கரத்தில் உருத்திராக்க மாலை - 36 அல்லது 96 தத்துவங்களையும் உணர்த்துவதுடன், இதைக்கொண்டு திருவைந்தெழுத்தைப் பலமுறை எண்ணிப் பல்காலும் உருவேற்றித் தியானித்தலே ஞானம் பெறும் நெறி என உணர்த்துகின்றது.
8. நெற்றிக்கண் – ஞானமும் வீடுபேறும் பெற விரும்புவோர் புலனடக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் அல்லது நெற்றிக்கண் திறந்து காமன் எரியுண்ட கதைபோலாகிவிடும் என்பதை உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அர்த்தநாரீசுவரர்

அர்த்த – பாதி, நாரி – பெண், ஈஸ்வரர் – இறைவன். அதாவது இறைவன் சிவசக்தியாகத் தோன்றும் காட்சி, அதாவது சிவன் பாதியாகவும் சக்தி பாதியாகவும் ஆணும் பெண்ணும் சமம் என்னும் தத்துவத்தைக் கூறும் வடிவம். இதில் சிவம் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவம் இல்லை என்னும் தத்துவமும் அடங்குகிறது, இத்துடன் இடதுபக்கத்தை (இருதயம் உள்ள பக்கம்) சக்திக்குக் கொடுத்து இல்லறத்தில் பெண்ணின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் தோற்றமாக அமைகிறது.

## 8. விஷ்ணு

இறைவன் (சிவம்) சக்திக்கூடாக காத்தல் தொழிலைச் செய்வதற்காக எடுத்த வடிவமாகும். இவர் திருமால், பெருமாள், கேசவன், கிருஸ்ணர், கோவிந்தன் எனவும் அழைக்கப்படுகின்றார். தமிழரின் முல்லை நிலக் கடவுளாக மாயோன் என அழைக்கப்படுவதைப் பின் வரும் தொல்காப்பியரின் பாடல் கூறுகிறது,

"மாயோன் மேய மன் பெறுஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்."

விஷ்ணுவின் அருவ வடிவமாகச் **சாலக்கிராமம்** போற்றப்படுகிறது. இந்துக் கோவில்களில் மூலஸ்தானத்தில் சயனக் கோலத்தில் உள்ள ஒரே ஒரு தெய்வம் இவரே. அனேக ஆலயங்களில் விஷ்ணு அவருடைய சக்தியாகிய இலட்சுமியுடன் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். விஷ்ணுவை பார்வதியின் அண்ணனாகவும், பிள்ளையார், முருகனின் மாமனாகவும் புராணங்கள் கூறுகின்றன.

**வைஷ்ணவமதம்** விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது. 12 ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் நூல் திராவிட வேதம் என அழைக்கப்படுகின்றது. மச்சபுராணம், வாமணபுராணம் என 12 புராணங்கள் இவரின் பெருமையைக் கூறுகின்றன. புராணங்கள் திருமால் 1.மச்ச அவதாரம், 2.கூர்ம அவதாரம், 3.வராக அவதாரம், 4.நரசிம்ம அவதாரம், 5.வாமண அவதாரம், 6.பரசுராம அவதாரம், 7.இராம அவதாரம், 8.பலராம அவதாரம், 9.கிருஷ்ண அவதாரம் ஆகிய 9 அவதாரங்களையும் (சிலர் கௌதமபுத்தரையும் சேர்க்கின்றனர்) எடுத்ததாகவும், வரும்காலத்தில் 10.கல்கி அவதாரம் எடுக்கப்போவதாகவும் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. ஐயப்பன்

புராணத்தில் இவர் சிவனின் புத்திரன் எனக் கூறப்பட்டுள்ளது. இவர் அரிஹரபுத்திரன், மணிகண்டன், சபரி, தர்மசாஸ்த்தா, வீரமணி என அழைக்கப்படுகிறார். புலி இவரின் வாகனமாகக் கூறப்படுகிறது.

சபரிமலை இந்தியாவில் கேரளமானிலத்தில் உள்ள மேற்குமலைத் தொடரில் பத்தனம்தித்தா மாவட்டத்தில் காடுகள் மற்றும் 18 மலைகள் சூழ்ந்த ஒரு மலை உச்சியில் (கடல் மட்டத்திலிருந்து சுமார் 914 மீற்றர் உயரம்) அமைந்த புண்ணிய தலமாகும். இவ்விடம் மஹிஷி என்ற அரக்கியை கொன்ற பின்பு சுவாமி ஐயப்பன் தியானம் செய்த இடம் என வரலாறு கூறுகிறது. வருடம் ஒருமுறை நவம்பரில் தொடங்கி ஜனவரியில் முடியும் 41 நாள் விரதம் இருந்து ஐயப்பரைத் தரிசிப்பதற்கான யாத்திரை நடைபெறுகின்றது.

## 10. துர்க்கை

பராசக்தியின் ஒரு வடிவமாகும். துர்க்கை என்றால் தீய எண்ணங்களை அழிப்பவள் எனப் பொருள்படும். இவள் வீரத்திற்கு அதிபதியாக வணங்கப்படுகிறாள். இவள் மகிஷாசுரமர்த்தினி எனவும், நவதுர்க்காவாக வன துர்க்கா, சூலினி துர்க்கா, ஜாதவேதோ துர்க்கா, சாந்தி துர்க்கா, சபரி துர்க்கா, ஜவால துர்க்கா, தீப துர்க்கா, லவண துர்க்கா, ஆசூரி துர்க்கா, எனவும் அழைக்கப்படுகின்றாள். சிங்கம் இவளின் வாகனமாகக் கூறப்படுகிறது.

## 11. இலட்சுமி

பராசக்தியின் ஒரு வடிவமாகும். இவள் செல்வத்திற்கு அதிபதியாக வணங்கப்படுகிறாள். இவள் விஷ்ணுவின் சக்தியாக விளங்குகின்றாள். இவள் மகாலட்சுமி, திருமகள், அலைமகள் ஸ்ரீதேவி, எனவும் 1.தனலட்சுமி, 2.தானியலட்சுமி, 3.தைரியலட்சுமி, 4.சந்தானலட்சுமி, 5.விஜயலட்சுமி, 6.வித்தியாலட்சுமி, 7.ஆதிலட்சுமி 8.கஜலட்சிமி என அட்ட இலட்சுமியாகவும் காட்சி அளிக்கின்றாள். இவள் செந்தாமரையில் வீற்றிருப்பாள்.

## 12. சரஸ்வதி

பராசக்தியின் ஒரு வடிவமாகும். இவள் கல்விக்கு அதிபதியாக வணங்கப்படுகிறாள். இவள் பிரம்மாவின் சக்தியாக விளங்குகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் வாணி, கலைவாணி எனவும் அழைக்கப்படுகிறாள். இவள் வெண்தாமரையில் வீற்றிருப்பாள்.

## 13. நவக்கிரகங்கள்

நவ என்றால் ஒன்பது, கிரகங்கள் (கோள்கள்). அவையாவன 1.சூரியன், 2.சந்திரன், 3.செவ்வாய், 4.புதன், 5.வியாழன், 6.வெள்ளி, 7.சனி, 8.ராகு, 9.கேது. நாங்கள் பூமியில் பிறக்கும் போது இவற்றின் நிலைகளை வைத்து எமது ஜாதகம் எழுதப்படுகின்றது.

தமிழ்நாட்டில் நவக்கிரகங்களுக்கான தனித்தனிக் கோயில்கள் உள்ளன. 1.சூரியன் - சூரியனார் கோவில் கும்பகோணம் அருகே ஆடுதுறை என்ற இடத்தில் உள்ளது. 2.சந்திரன் - திங்களூர் கோவில். தஞ்சாவூருக்கு அருகில் உள்ளது. 3.செவ்வாய் - கும்பகோணத்தில் இருந்து சிதம்பரம் செல்லும் வளியில் உள்ள வைத்தீஸ்வரன் கோவில். 4.புதன் - திருவெண்காட்டில் அமைந்துள்ளது. 5.வியாழன் (குரு) - ஆலங்குடியில் அமைந்துள்ளது. 6.வெள்ளி (சுக்கிரன்) - கஞ்சனூரில் அமைந்துள்ளது. 7.சனி - காரைக்காலில் திருநல்லாறில் அமைந்துள்ளது. 8.இராகு - திருநாகேஸ்வரம் கும்பகோணத்திலிருந்து 6 கி.மீ. இல் அமைந்துள்ளது. 9.கேது - பூம்புகார் அருகில் கீழ்ப்பெரும்பள்ளம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

## 14. வைரவர்

இவர் பைரவர் எனவும் அழைக்கப்படுகின்றார். இவர் இறைவனின் (சிவம்) மகேஸ்வர வடிவங்களில் ஒருவர். இவரைக் காவல் தெய்வம் எனக் கூறுவர். இவருக்கு நாய் வாகனமாகக் கொள்ளப்படுகிறது. இவர் காலபைரவர் (காசியில் இவருக்கு மதிப்பளிக்கப்படுகிறது), க்ஷேத்திரபாலர், வடுகர், உக்ரபைரவர், சட்டைநாதர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

## 15. கொடி ஸ்தம்பம்

கொடிமரம் எமது உடலில் உள்ள முள்ளந்தண்டைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும், நடுமரம் இறைவனை அதாவது பதியையும், கொடிச்சீலை ஆன்மா அதாவது பசுவையும், தெற்பைக்கயிறு மும்மலங்கள் அதாவது பாசத்தையும் மஞ்சள்கயிறு திருவருட்சக்தியையும் (திரோதானசக்தி) குறிக்கும். கொடிமரத்தை எமது உடலில் உள்ள சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுத்தி, ஆக்ஞை என்பனவற்றைப் பிரதிபலிப்பதாகவும் கூறுவர். திருவிழாக் காலத்தில் கொடிமரத்தில் ஏற்றப்படும் கொடிச்சீலையில் வரையப்படும் நந்தி பரிபக்குவப்பட்ட ஆன்மாவையும், சுற்றி வரையப்பட்ட பொருட்கள் ஆன்மாக்கள் விரும்பும் போகங்களையும் குறிக்கின்றன. சீலைக்குள் தெற்பைக்கயிற்றை வைத்து முறுக்கி கொடிக்கம்பத்தைச் சுற்றிக் கட்டுதல், கண்ணுக்குப் புலப்படாத பாசம் ஆன்மாவாகிய சீலையை முறுக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆன்மாவாகிய சீலை பதியாகிய கம்பத்தைப் பற்றிப் பிடிக்க ஜீவான்மா பாசம் மறைந்து பரமாத்மாவுடன் இணைகிறது. இதுவே கொடிக்கம்பத்தின் தத்துவம்.

## 16 நந்தி

நந்தி என்றால் ஆனந்தம், மகிழ்ச்சி தருபவர் என்று பொருள். இவர் ஈசன் உறையும் இடத்திற்குக் காவலாளியாகச் செயல்ப்படுபவர். எனவே மூலஸ்தானத்தினுள் உள்ள இறைவனை வணங்க முன்பு நந்தி தேவரை வணங்கி அவரின் அனுமதி பெறவேண்டும். இதனால்தான் பேச்சுவழக்கில் முக்கிய சம்பவங்களின் போது யாராவது தடுத்தால் "என்ன இவன் நந்தி மாதிரி தடுக்கிறான்" எனக் கூறுவது வழக்கம். பிரதோஷ காலங்களில் நந்தியை வழிபடுபவர்களுக்கு அருள் கிடைக்கும் என்பது ஐதீகம். திருமந்திரம் என்னும் நூலை எழுதிய திருமூலருக்கு நந்தி தேவர் குருவாக இருந்து வேத, ஆகமங்களை விளக்கியதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 17. பலி பீடம்

நாம் கோவிலுக்குள் சென்றவுடன் நம் மனதில் நமக்கு தெரியாது ஒளிந்திருக்கும் காமம், ஆசை, குரோதம் (சினம்), லோபம் (கடும் பற்று), மோகம் (கற்பு நெறி பிறழ்வு), பேராசை, மதம் (உயர்வு தாழ்வு மனப்பான்மை), மாச்சர்யம் (வஞ்சகம்), ஆகிய தீய எண்ணங்களை பலி கொடுக்க உறுதி செய்துகொள்ளும் இடம் பலிபீடமாகும். பலிபீடத்திற்கு முன்னால் விழுந்து வணங்கும் போது மேற்படி எண்ணங்களை பலியிட்டவுடன் எமது ஆணவம் பலியிடப்பட்டு தூய மனத்துடன் எமது ஆலய வழிபாட்டை ஆரம்பிக்கலாம். இதனாலேயே ஆலயத்திற்குள் நாம் சென்றவுடன் முதலில் பலிபீடத்திற்கு முன்னால் விழுந்து வணங்கவேண்டும் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. ஆஞ்சனேயர்

இராம்பிரானின் பரம பக்தர் ஆஞ்சனேயர். பொதுவாக வைஷ்ணவக் கோயில்களில் பிரதிஸ்டை செய்யப்படும் இவர் இப்போது சைவ ஆலயங்களிலும் அடியார்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக பிரதிஸ்டை செய்யப்படுகின்றார். பிரமச்சாரியான இவரை வணங்கி நினைத்த காரியங்களை நிறைவேற்றலாம் என்பது இவரை வணங்குபவர்களின் நம்பிக்கை ஆகும்.

# பஞ்சபுராணம்

பஞ்சபுராணம் என்பது 1. தேவாரம், 2. திருவாசகம், 3. திருவிசைப்பா, 4. திருப்பல்லாண்டு, 5. திருப்புராணம் ஆகிய ஐந்து (பஞ்ச) திருமுறைப் பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும். பிற்காலத்தில் திருப்புகழையும் சேர்த்து ஆறு பாடல்களாகப் படிக்கும் மரபு உருவாகியது. இப்பொழுது ஆலயங்களில் சிவாச்சாரியார் பஞ்சபுராணம் பாடுமாறு கூறும் போது சிலர் மேற்படி ஆறு பாடல்களுடன் பெரிய புராணம், அபிராமி அந்தாதி உட்பட வேறும் தங்களுக்குத் தெரிந்த சில பாடல்களைச் சேர்த்துப் பாடும் தவறான வழக்கத்தை உருவாக்குகின்றார்கள். நாயன்மார்கள் இத்திருமுறைப் பாடல்களை கருத்தறிந்து பண்ணுடன் பாடியே பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்கள். மாணிக்கவாசகப்பெருமான் சிவபுராணத்தில்

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்"

என மிகவும் தெளிவாக் கூறியுள்ளார்.

எனவே நாமும் பஞ்சபுராணம் பாடும் போது பாடலின் கருத்தறிந்து மனமுருகிப் பண்ணுடன் பாடிப் பலன் அடைவோமாக.

## 1. தேவாரம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்ல:துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
  வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற் கரியோய் நீ
  வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
  யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
  அதுவும் உன்றன் விருப்பன்றே

## 3. திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
  உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
  சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
  அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
  தொண்டனேன் விளம்புமா விளம்பே

## 4. திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
  வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
  புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியோமுக்
  கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
  பல்லாண்டு கூறுதுமே

## 5. திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோ மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## தத்துவமசி -
## அது (இறைவன்) நீ (ஆன்மா) ஆகிறாய்

நான்கு வேதங்களிலும் பல மகா வாக்கியங்கள் கூறப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு மகாவாக்கியம் முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. **ரிக்** வேதத்தில் ஐதரேய உபநிடதத்தில் **"ப்ரக்ஞானம் பிரம்மம்" (உணர்வே பரம்பொருள்)** என்ற மகாவாக்கியமும், **யசுர்** வேதத்தில் பிரகதாரண்யக உபநிடதத்தில் **"அஹம் பிரம்மாஸ்மி" (நான் பிரம்மமாயிருக்கின்றேன்)** என்ற மகாவாக்கியமும், **சாம** வேதத்தில் சாந்தோக்கிய உபநிடதத்தில் **"தத் த்வம் அஸி" (அது நீ ஆகிறாய்)** என்ற மகாவாக்கியமும், **அதர்வண** வேதத்தில் மாண்டூக்ய உபநிடதத்தில் **"அயம் ஆத்மா பிரம்ம" (ஆத்மாதான்** பரம்பொருள்) என்ற மகாவாக்கியமும் முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது.

தத்துவமசி - தத் த்வம் அஸி, தத்-அது, துவம்-நீ, அசி-ஆகுறாய். இம் மகா வாக்கியம் உண்மையைப் புரியவைக்கும் வாக்கியமாகும். சாந்தோக்கிய உபநிடதத்தில் ஆறாவது அத்தியாயத்தில் உத்தாலக ஆருணி என்ற மகரிசி தனது மகன் சுவேதகேதுவை பன்னிரண்டு வயசில் வேதசாத்திரங்களை கற்பதற்காக குருகுலத்திற்கு அனுப்புகின்றார். பன்னிரண்டு வருடங்களின் பின் படிப்பு முடிந்து வந்த வாலிபனிடம் மகரிசி கேட்ட கேள்விக்கு (எதனால் கேள்விக்கெட்டாதது கேட்கப்பட்டதாயும், நினைவுக்கெட்டாதது நினைக்கப்பட்டதாயும், அறிவுக்கு எட்டாதது அறியப்பட்டதாயும் ஆகும் என்ற கேள்விக்கு) மகனிடம் பதில் கிடைக்காததால் தானே பரம்பொருளை ஒன்பது எடுத்துக் காட்டுகளால் விளக்கி, முடிந்த முடிவாக இம் மகாவாக்கியத்தை ஒன்பதுமுறை உபதேசிக்கின்றார்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் பல இடங்களில் இவ்வுண்மை வலியுறுத்தப்படுகின்றது. உதாரணமாக பின் வரும் அருணந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவநாயனாரால் அருளப்பட்ட **சிவஞானசித்தியார்** நூலின் இரண்டாம் சூத்திரம் சுபக்கம் பாடல் எண் 91 இல் இறைவன் உயிர்களிடத்தில் அத்துவிதமாய் கலந்து பிரிவின்றி நிற்பான் எனக் கூறப்பட்டுள்ளது.

"உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்து ஆனையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காது எங்கும்."

திருமூலநாயனார் அருளிய **திருமந்திரம்** எட்டாம் தந்திரத்தில் பாடல் எண் 2568, 2569,2570,2571,2577, என்பனவற்றில் தத்துவமசி பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பாடல் 2568

"சிவ துரியத்துத் தொம்பதம் சீவனார்
தாவு பர துரியத்தினில் தற்பதம்
மேவு சிவதுரியத்து அசி மெய்ப்பதம்
ஓவி விடும் **தத்துவமசி** உண்மையே."

பாடல் எண் 2569

"ஆறாறு அகன்ற அணுத்தொம்பதம் சுத்தம்
ஈறான தற்பதம் எய்து உபசாந்தத்துப்
பேறாகிய சீவன் நீங்கிப் பிரசாதத்து
ஈறான தொந்தத்தசி **தத்வ மசியே**."

சீவன் சிவனே எனக்கூறும் பாடல் எண் 2570

"ஆகிய அச்சோயம் தேவதத்தன் இடத்து
ஆகிய விட்டு விடாத இலக்கணைத்
தார் உபசாந்தமே **தொந்தத் தசி**என்ப
ஆகிய சீவன் பரன் சிவனாமே."

பாடல் எண் 2571

"துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவை மன்னா அந்துவயத்து ஏகமான
தவமுறு **தத்துவ மசி** வேதாந்த
சிவமாம் அது சித்தாந்த வேதாந்தமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் எண் 2577

> "**நீஅது ஆனாய்** எனநின்ற பேருரை
> ஆயது நான்ஆனேன் என்னச் சமைந்துஅறச்
> சேயசிவமாக்கும் சீர்நந்தி பேரருள்
> ஆயதுவாய் அனந்த ஆனந்தி ஆகுமே."

இம்மகா வாக்கியத்தின் உட்கருத்துப்பற்றி வெவ்வேறு வேதாந்தப் பிரிவினரின் கொள்கைகள் மாறுபடுகின்றது. இம்மகாவாக்கியத்தை விளங்குவதற்கு முன்பு முக்கியமான சில விடையங்களை நாம் அறியவேண்டியுள்ளது. முதலாவதாக இறைவன் எங்கும் நிறைந்தவனாக இருப்பதை நாம் உணரவேண்டும். இரண்டாவதாக நாம் யார் என்பது எமக்குத் தெரியவேண்டும்.

நான் இருக்கின்றேன் என்ற தனது இருப்பைப் பற்றிய அறிவு மனிதனுக்குமட்டுமே உள்ளது. மற்ற எந்த ஜீவராசிகளுக்கும் அவைகளின் இருப்பைப் பற்றிய அறிவு கிடையாது. இவ்அறிவு இருப்பதால் எது சரி, எது தவறு என்னும் விடையம் மனிதனால் மட்டும் தான் உணரக்கூடியதாக உள்ளது. மற்ற ஜீவராசிகளுக்குக் கிடையாது. இதனால் ஒரு செயலைத் தேர்ந்து செய்வதோ செய்யாமல் இருக்கவோ மனிதனால் மட்டும் தான் முடியும் மற்ற ஜீவராசிகளால் முடியாது. இவ்வாறே மனிதனுக்கு வாழ்க்கையில் குறிக்கோள் என்று ஒன்று உண்டு. இக்குறிக்கோளை நான்கு பகுதியாகச் சாஸ்திரங்கள் பிரித்துக் கூறுகின்றன. அவையாவன 1. பொருள் (பாதுகாப்பைத் தேடி அதன் மூலம் மன நிறைவை பெறுவது.), 2. இன்பம் (மன மகிழ்ச்சி மூலம் மன நிறைவை பெறுவது.), 3. அறம் (தர்மம்) (அறவழியில் வாழ்வதன் மூலம் மன நிறைவை பெறுவது), 4. வீடுபேறு (நிறைவு). நிறைவை அறிதலே நிறைவை அடைதலாகும். நிறைவு என்பது பரம்பொருளின் சொரூபம். சூடாயிருப்பதே நெருப்பின் சொரூபம் போல நிறைவாயிருப்பதே பரம்பொருளின் சொரூபம். சூரியனும் ஒளியும், நெருப்பும் சூடும் இருவேறு பொருட்களல்ல. அவ்வாறே பரம்பொருளும் நிறைவும் இரு வேறு பொருட்கள் அல்ல. நெருப்பை அறிந்தால் சூட்டைப் புரிந்து கொள்வதுபோல, சூரியனை அறிந்தால் ஒளியைப் புரிந்து கொள்வதுபோல பரம் பொருளை அறிதலே நிறைவை புரிந்துகொள்வதாகும். எனவே நிறைவை அறிதலே பரம்பொருளை தெரிந்துகொள்வதாகும். எந்த ஒரு பொருள் அண்டசராசரங்களுமாக விளங்குகின்றதோ அதுவே பரம்பொருளாகும். கடலின் இருப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது நீராகும். அவ்வாறு அலைகளின் இருப்பும் நீராகும், நீர் இல்லாவிடில் கடலோ, அலையோ இருக்கமாட்டாது. அவ்வாறே பரம்பொருள் (மெய்ப்பொருள்) இல்லாவிடில் அண்டசராசரங்களும் இருக்காது. கடலாகிய காரணப் பொருளுக்கு நீர் காரியமாக இருப்பது போல, தங்கமான காரணப் பொருளுக்கு ஆபரணம் காரியமாக இருப்பது போல, (மரம் காரணம் தளபாடம் காரியம்) காரணம் இல்லாமல் காரியம் இருக்கமுடியாது ஆனால் காரியம் இல்லாமல் காரணம் இருக்கமுடியும். கடல் இருக்கிறது என்றால் நீர் இருக்கின்றது என்பதைப்போல பிரபஞ்சம் இருக்கின்றது என்றால் பரம்பொருள் இருக்கின்றது என்பது நிரூபணமாகிறது. எனவே எல்லாம் சிவமயம் (பரம்பொருள்) நீ யார் என்று உனக்குத் தெரியாது. தெரிந்தால் பரம்பொருளை அறிவாய். தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தின் பொருளை புரிந்து கொள்வதற்கு பரம்பொருளை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். எனவே பரம்பொருளைப் புரிந்துகொண்டால் மகாவாக்கியத்தைப் புரிந்து கொள்ளலாம். மகாவாக்கியத்தை அதாவது நீயே பரம்பொருள் என்பதைப் புரிந்துகொண்டால் நிறைவு கிடைக்கும

## தைப்பொங்கல்

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது பழமொழி. தைப்பொங்கல் தமிழர்களால் சமயங்கள் கடந்து தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். தைமாதம் சூரியன் மகரராசிக்குள் (மகரசங்கிராந்தி) பிரவேசிக்கும் நாள் தைப்பொங்கலாகும். அதாவது தட்சணாயன காலத்தில் விலகிச் சென்ற சூரியன் உத்தராயன காலத்தின் தொடக்கமாக மகரத்தில் பிரவேசிக்கும் நாள். இது முழுக்க முழுக்க உழவர் சம்பந்தப்பட்ட விழாவாக இருந்தாலும் எல்லோராலும் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். சங்ககாலத்தில் இருந்தே இவ்விழா நடப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. உழைக்கும் மக்கள் நாட்டில் மழைபெய்து பூமி நல்ல விளைச்சலைக் கொடுத்ததற்காச் சூரியனுக்கும் (இயற்கைக்கும்), பூமியை உழுவதற்குப் பயன்படுத்திய மாட்டிற்கும் (மற்ற உயிரினத்திற்கும்) நன்றி தெரிவிக்கும் முகமாக அறுவடைக்கு முன்பாக சிறிது நெல்லை அறுவடை செய்து அரிசியாக்கி சர்க்கரைப் பொங்கல் பொங்கிப், படைத்து வழிபட்ட விழாவே பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலுக்கு முதல்நாள் **போகி** (போகி என்ற சொல் இந்திரனைக் குறிக்கும் சிலர் போக்கி என்ற சொல் மருவி போகி ஆனது எனவும் கூறுவர்) அன்று வீடு, வளவைச் சுத்தப்படுத்தி தேவையற்ற பொருட்களை வெளியேற்றுவார்கள். **பொங்கல்** அன்று அதிகாலையில் வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு புதுப் பானையில் சர்க்கரைப் பொங்கல் பொங்கி சூரியபகவானுக்கு கரும்பு, மஞ்சள் பழங்களுடன் அதைப் படைத்து, உறவினர், நண்பர்களுடன் பொங்கல், பலகாரம், பழங்களை பரிமாறிக் குதூகலிப்பர். மறுநாள் **பட்டிப் பொங்கல் (மாட்டுப்பொங்கல்)** மாடு வைத்திருக்கும் உழவர்கள் அன்றும் பொங்கல் பொங்கி மாடுகளை குளிப்பாட்டி அவற்றிற்குப் பரிமாறும் நாள். அன்று இலங்கையில் தமிழ்ப்பிரதேசங்களில் மாட்டுவண்டில் சவாரிப் போட்டிகள் நடைபெறும். தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு என்னும் மாடு பிடிக்கும் போட்டிகள் நடைபெறும். இந்தியாவிலுள்ள தமிழர்களால் நான்காம் நாள் **காணும்பொங்கல்** என உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குப் போய் விருந்துண்டு மகிழும் நாளும் கொண்டாடப்படுகின்றது.

பொங்கலுக்கான புராணக் கதையைப் பார்ப்போமானால் காலம் காலமாக ஆயர்கள் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் **இந்திர விழா** என்ற பெயரில் இந்திரனை வழிபட்டு வந்தனர். கிருஷ்ணபகவானின் அவதாரத்தின் பின் அவரின் அறிவுரைப்படி ஆயர்கள் ஆநிரைகளுக்கும், தங்களுக்கும் வளம்தரும் கோவர்த்தன மலைக்கு மரியாதை செய்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன் புயலாலும், மழையாலும் ஆயர்களைத் துன்புறுத்தினான். கிருஷ்ணபகவான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களையும், ஆநிரைகளையும் காப்பாற்றினார். தவறை உணர்ந்த இந்திரன் கிருஷ்ணபகவானிடம் மன்னிப்புக் கோரி, தன்னையும் மக்கள் வழிபடவேண்டும் என வேண்டினான். அன்று தொடக்கம் மக்கள் பொங்கலுக்கு முதல் நாள் இந்திர வழிபாட்டை (போகிப் பண்டிகை) கொண்டாடினர். தை முதலாம் நாள் சூரியபகவானை சூரியநாராயணனாகப் பாவித்து வழிபட்டனர். மறுநாள் ஆநிரைகளுக்கு விழா (மாட்டுப் பொங்கல்) எடுத்தனர். இலக்கிய காலத்திலிருந்தே **இந்திர விழா** என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திர விழா இருபத்தி எட்டு நாட்கள் நடந்ததற்கான சான்றுகளும் உள்ளன. இந்நாட்களில் ஆலயங்கள், வீடுகள், ஊர்களைச் சுத்தம்செய்து சிவன் முதலான தெய்வங்களுடன் காவல்தெய்வங்கள் உட்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் இந்திரனையும் பின்பு சூரியனையும், மக்கள் வழிபாடு செய்தனர் எனக் கூறப்படுகின்றது.

தை முதல்நாளே தமிழரின் புத்தாண்டு என்பதற்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. 1921 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை அடிகள் தலைமையில் கூடிய சைவம், வைணவம், புத்தம், சமணம், இந்து, கிறீஸ்த்தவம், முகமதியம் ஆகிய எல்லாச் சமயத்தைச் சேர்ந்த 500 தமிழ் அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வின் இறுதியில்

1. **தை முதல்நாளே தமிழ் ஆண்டுப் பிறப்பு**.
2.திருவள்ளுவர் பெயரில் தமிழ் ஆண்டைப் பின்பற்றுதல்.
3.ஆங்கில ஆண்டுடன் 31 ஆண்டுகளைக் கூட்டித் திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிடவேண்டும். என்னும் மூன்று முக்கிய முடிவுகளை அறிவித்தனர்.

இதற்கு ஆதாரமாகவும், சித்திரைப் புத்தாண்டு இடையில் வந்தது என்பதற்கு பின் வரும் சங்ககால நூல்களில் வரும் பாடல் வரிகளையும் கூறலாம்.

1. "தைஇத் திங்கள் தண்கயம் படியும்" என்று **நற்றிணை**
2. "தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' என்று **குறுந்தொகை**
3. "தைஇத் திங்கள் தண்கயம் போல்" என்று **புறநானூறு**
4. "தைஇத் திங்கள் தண்கயம் போல" என்று **ஐங்குறுநூறு**
5. "தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ" என்று **கலித்தொகை**

## பிரதோசம்

பிரதோச விரதம் சைவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் சிவ விரதங்களில் ஒன்றாகும். பிரதோசம் என்றால் குற்றமற்றது எனப் பொருள்படும். பிரதோசவிரதம் ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு பட்சங்களிலும் வருகின்ற திரயோதசித் திதியில் சூரியன் மறைவதற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாளிகையும் மொத்தம் ஏழரை நாளிகை உள்ள **பிரதோசகாலத்தில்** சிவனைக் குறித்து அநுட்டிக்கப்படும் விரதமாகும். பிரதோச காலவழிபாட்டில் நந்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

பிரதோசத்திற்காகக் கூறப்படும் புராணக்கதையில் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடையும்போது ஆலகால விசம் தோன்றியது. இதற்கு அஞ்சிய தேவர்களும் அசுரர்களும் தங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமாறு சிவனை வேண்டினர். சிவனும் இவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆலகாலவிசத்தை தானே உண்டார். அப்போது சிவனுடன் இருந்த பார்வதி விசம் சிவனின் வயிற்றுக்குப் போகமலிருக்க சிவனின் கழுத்தை இறுகப்பிடித்தார். இதனால் ஆலகாலவிசம் சிவனின் கழுத்திலேயே தங்கிவிட்டது. இதனாலேயே சிவனின் கழுத்து நீலநிறமாக காட்சியளிக்கிறது. மூவுலகத்திற்கும் ஏற்படவிருந்த பேரழிவை சிவன் தன்னகத்தே இருத்திக் காத்த காலவேளையே பிரதோச காலமாகும். பலவகைப்பட்ட பிரதோசங்கள் இருந்தாலும் சனிப்பிரதோசம் (சனிக்கிழமையில் வருவது) மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

மாணிக்கவாசகப்பெருமான் அருளிய **சிவபுராணம்**

## திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கும் மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



சிவ வடிவம் - கங்காள மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமிப்பட்டர் விழா

பக்தர்களுக்காக தெய்வம் செயல்ப்படும் செயல்களை நிரூபித்த நிகழ்ச்சிகளில் ஒன்றே அபிராமிப்பட்டர் வாழ்வில் நடந்த இந்த நிகழ்வாகும். அதாவது அம்பிகையானவள் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அபிராமிப்பட்டரின் வேண்டுகோளை ஏற்று செயற்பட்ட வரலாற்றை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்காக இவ்விழா சைவ ஆலயங்களில் முக்கியமாக அம்மன் ஆலயங்களில் கொண்டாடப்படுகின்றது. **அபிராமி அந்தாதி** பராசக்தியை வழிபட்ட அந்தணரான அபிராமிப்பட்டரால் பாடப்பட்டது. அந்தாதி (அந்தம் முடிவு, ஆதி துவக்கம்) என்பது ஒரு பாடல் முடியும் சொல்லிலிருந்து மறு பாடல் தொடங்குவதாகும்.

அபிராமிப்பட்டர் இந்தியாவில் சோழநாட்டில் காவிரி ஆற்றங் கரையில் திருக்கடையூரில் வாழ்ந்தவர். சக்திவழிபாடான சாக்த நெறியைக் கடைப்பிடித்த இவர் இசைத்துறையிலும், பாடல்கள் இயற்றுவதிலும் வல்லவர். ஒளி வடிவில் அம்பிகையைத் தரிசித்துப் பேரின்பம் கண்ட இவரின் தெய்வீக நிலையை புரிந்து கொள்ளதவர்கள் இவரை பித்தன் என வசை பாடினர். இவர்களின் ஏச்சையும், பேச்சையும் அபிராமிப்பட்டர் பொருட்படுத்தாமல் அம்பிகையுடன் தாய், மகன் என்னும் உறவுநிலையை ஏற்படுத்தி தனது வழிபாட்டைத் தொடர்ந்தார்.

அக்காலத்தில் தெய்வபக்தியும், மதப்பற்றும் மிகுந்த முதலாம் சரபோஜி மன்னர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அவர் ஒரு தை அமாவாசை தினத்தன்று காவிரிப்பூம் பட்டினம் சென்று காவிரி சங்கமத்தில் நீராடினார். பின்பு திருக்கடவூரில் உள்ள ஸ்ரீ அமிர்தகடேசுவரர், ஸ்ரீ அபிராமி அம்பிகையையும் தரிசனம் செய்வதற்காக அக் கோயிலுக்குச் சென்றார். கோயிலுக்குள் அபிராமிப்பட்டர் அம்பிகையின் முன் இவ்வுலக நினைவு எதுவும் இன்றி தியானத்தில் இருந்தார். மன்னர் வந்ததைக் கூடக் கவனிக்காமல் இருந்த இவரைப் பார்த்து வியந்த மன்னர் இவரைப்பற்றி விசாரித்தார். இவர் ஒரு பித்தர் என அருகிலிருந்தவர்கள் கூறியதை நம்பாத அரசர் வழிபாடு முடித்துத் திரும்பும் போது அபிராமிப்பட்டரிடம் இன்று என்ன திதி எனக் கேட்டார். அம்பிகையின் ஜோதிவடிவில் லயித்திருந்த அவர் இன்று பௌர்ணமி எனப் பதில் கூறினார். அரசரும் பரிவாரங்களும் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு தியானம் கலைந்த அபிராமிப்பட்டர் நடந்தவற்றை உணர்ந்து மனம் வருந்தினார். உலகம் தன்னை பித்தன் என கூறுவதை மெய்ப்பிப்பது போல தான் நடந்துகொண்டதை உணர்ந்த அவர் அம்பிகையே தன்னை காத்தருள வேண்டும் என அம்பிகையிடம் வேண்டிக் கொண்டார். பின்பு அம்மன் சந்நிதிக்கு முன்பாக ஒரு ஆழமான குழியை வெட்டி அதில் விறகை அடுக்கித் தீ மூட்டினார். குழிக்கு மேல் ஒரு விட்டமும், நூறு கயிறுகளாலான உறியையும் கட்டி அதில் ஏறி அமர்ந்து கொண்டார். அம்பிகை எனக்குக் காட்சி தந்து இந்தப் பழியை நீக்காவிட்டால் என் உயிரை விடுவேன் என்று சபதம் செய்துவிட்டு அபிராமி அந்தாதியைப் பாட ஆரம்பித்தார்.

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி மென் கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழுத்துணையே"

எனத்தொடங்கும் பாடலை ஆரத்பித்து ஒவ்வொரு பாடலின் முடிவிலும் உறியின் கயிறுகளை ஒவ்வொன்றாக அறுத்துக் கொண்டே வந்தார். இவ்வாறு எழுபத்தொன்பதாவது பாடலாகிய

"விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே"

என்ற பாடலைப் பாடியவுடன், ஸ்ரீ அபிராமியம்பிகை வெளிப்பட்டுத் தோன்றி அபிராமிப்பட்டருக்கு காட்சி கொடுத்தருளினாள். அப்பொழுது தன் தாடங்கம் என்னும் தோட்டினை எடுத்து வானவீதியில் தவழ விட்டாள். அந்தத் தாடங்கம் வானில் மிதந்து பலகோடி நிலாக்கள் ஒன்று கூடினாற் போல் ஒளியைப் பொழிந்து பௌர்ணமியைப் போலப் பிரகாசித்து ஜொலித்தது. அம்பிகை அபிராமிப்பட்டரிடம் நீ வாய் தவறி மன்னனிடம் கூறியதையும் மெய்ப்பித்தேன். நீ தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து பாடு எனக் கூறி மறைந்தாள். அம்பிகை அருள் பெற்ற அபிராமிப்பட்டர் பரவசமுற்று தன் அனுபூதி நிலையை வெளிப்படுத்தும் நூறு பாடல்கள் அடங்கிய அபிராமி அந்தாதிப் பாடல்களைப் பாடி நிறைவு செய்தார். மன்னரும் மக்களும் அபிராமிப்பட்டரின் தெய்வீக நிலையை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கோரினர். ஒரே இரவில் பாடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி அந்தாதி உதிக்கின்ற எனத் தொடங்கி நூறாவதுபாடல் உதிக்கின்ற என முடிகிறது

## தைப்பூசம்

தைப்பூசம் சைவசமயத்தவர்களால் சைவக்கோயில்களில் முக்கியமாக முருகன் ஆலயங்களில் தை மாதம் பூச நட்சத்திரத்தில் (பெரும்பாலும் பௌர்ணமி திதி கூடி வரும் நாளில்) கொண்டாடப்படுகின்றது. தைப்பூசத்தில் அன்றுதான் உலகம் உருவாகியதாக ஐதீகம். தைபூசம் முருகப்பெருமான் அவதரித்த நாளாகவும் கூறப்படுகின்றது. தைப்பூசத்தில் அன்றுதான் முருகப்பெருமான் அசுரர்களை அழிக்க பார்வதி தேவியிடம் ஞானவேலைப் பெற்றுக்கொண்டார் எனவும் இந்த நிகழ்ச்சி பழனியில் நடந்ததாகவும் கூறப்படுவதால் தென் இந்தியாவில் உள்ள எல்லா முருகன் ஆலயங்களிலும் சிறப்பாக ஆறுபடை வீடுகளில் மிகவும் சிறப்பாகப் பழனியில் தைப்பூசத் திருவிழா கொண்டாடப்படுகின்றது. இந்த ஆலயங்களில் எல்லாம் தைப்பூசத்தில் அடியார்கள் வேல்குத்திக் காவடி எடுத்தும், பால்குடம் எடுத்தும் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவர். இந்தியா, இலங்கையில் மட்டுமல்லாமல் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், மியன்மார், தென்ஆபிரிக்கா, தாய்லாந்து, இந்தோனேசியா, அமெரிக்கா, ஐரோப்பியநாடுகள், அவுஸ்திரேலியா உட்பட உலகிலுள்ள பல நாடுகளிலும் முருகன் ஆலயங்களில் தைப்பூசத்திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

சிதம்பரத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் ஆனந்த நடனம் ஆடிப் பதஞ்சலி, வியாக்கிரபாதர், தேவர்கள், முனிவர்களுக்குக் காட்சி அளித்த நாள் தைப்பூசம் ஆகும். இரணியவர்மன் என்னும் மன்னன் சிதம்பரத்திற்கு வந்து திருப்பணிகள் செய்துகொண்டிருந்த காலத்தில் ஒரு தைப்பூசத்தில் அன்று நடராஜரை நேரில் தரிசித்ததாகக் கூறப்படுகின்றது. இதனாலேயே சிவன் கோவில்களில் தைப்பூசத்தன்று சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

தைப்பூசத்தன்று சிவன் முப்புரங்களையும் எரித்ததாகக் கூறப்படுகின்றது.

தைப்பூசத் திருநாளன்று பிள்ளைகளுக்கு ஏடுதொடக்குதல், காதுகுத்துதல் போன்ற சுபகாரியங்கள் செய்யப்படுகின்றது. இலங்கையில் தமிழர்கள் தைப்பூசத்தில் அன்று புதிரெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அறுவடைக்குத் தயாராகவுள்ள தங்கள் வயல்களிலிருந்து முதலில் சிறிது நெற்கதிர்களை எடுத்தல்) அரிசியாக்கிப் பொங்கி இறைவனுக்குப் படைப்பார்கள்.
வள்ளலார் இராமலிங்க சிவாமிகள் ஒரு தைப்பூசத்தன்று ஒளியானார் எனக் கூறப்படுகின்றது. இதனால் தைப்பூசத்தன்று வள்ளலார் விழாவைக் கொண்டாடுகின்றனர்.

# மகாசிவராத்திரி

சிவ விரதங்கள் ஒன்பது ஆகும். அவையாவன 1.சிவராத்திரி விரதம், 2.பிரதோஷ விரதம், 3.கேதாரகௌரி விரதம், 4.திருவாதிரை விரதம், 5.சோமவார விரதம், 6.உமாமகேசுவர விரதம், 7.கலியாணசுந்தர விரதம், 8.சூல விரதம், 9.இடப விரதம். இவற்றில் சிவராத்திரி விரதம் முக்கியமான விரதமாகும்.

சிவராத்திரி விரதம் ஐந்து ஆகும். அவையாவன 1.நித்திய சிவராத்திரி (பன்னிரண்டு மாதங்களிலும் வருகின்ற வளர்பிறை, தேய்பிறை சதுர்த்தசி நாட்கள்), 2.மாத சிவராத்திரி (ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற தேய்பிறை சதுர்த்தசி நாட்கள்), 3.பட்ச சிவராத்திரி (தை மாதத்தில் தேய்பிறை பிரதமை முதல் பதின்மூன்று நாட்களும்) ,4.யோக சிவராத்திரி (திங்கட்கிழமை அன்று அமாவாசையும் அறுபது நாழிகையும் இருக்கும் நாள்), 5.மகா சிவராத்திரி (ஒவ்வொரு ஆண்டும் உத்தராயண சிசிர ருதுவில் குளிர் காலத்தில் மாசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் இரவு பதின்நான்கு நாளிகைக்கு மேல் பதினாறு நாளிகைக்கு உட்பட்ட வேளை). இவற்றில் மகா சிவராத்திரி மகிமை பெற்றதாகும்.

மகாசிவராத்திரி பற்றிப் பல புராணக் கதைகள் உள்ளன. அனேகமான புராணக்கதைகள் எல்லாம் வேத, ஆகமங்களில் கூறப்பட்ட மிகப் பெரிய தத்துவங்களை இலகுவாக மக்களுக்குப் புரியவைப்பதற்காகவே கூறப்பட்டுள்ளன. மகாசிவராத்திரி பற்றிய புராணக்கதைகளில் பெரும்பாலாகக் கூறப்படும் கதை அடி, முடி தேடிய கதையாகும்.

1. ஒருகாலத்தி படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவுக்கும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவிற்கும் யார் பெரியவர் என்னும் போட்டி எழுந்தது. இதனால் இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடத் தொடங்கினார்கள். இதைப் பார்த்த சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருக்கும் புத்தி புகட்டுவதற்காக ஜோதிவடிவாக அவர்கள் முன் தோன்றி தனது அடியை அல்லது முடியை யார் முதல் கண்டுபிடிக்கிறார்களோ அவரே பெரியவர் என முடிவுசெய்வதாகக் கூறினார். இதனால் பிரம்மா அன்னவாகனத்தில் ஏறி முடியைத் தேடி வானத்திலும் விஷ்ணு வராக வாகனத்தில் ஏறி அடியைத் தேடிப் பூமியைக் குடைந்துகொண்டும் புறப்பட்டனர். அவர்கள் போகப் போக ஜோதிவடிவம் வளர்ந்துகொண்டு போனது. இதனால் இருவரும் அடி, முடியைக் காணமுடியாமல் களைத்துப் போய் திரும்பி வந்தனர். பிரம்மா தான் முடியைக் கண்டதாகவும் அதற்குச் சாட்சியாக இறைவனின் தலையில் இருந்து விழுந்த தாழம் பூவையும் துணைகொண்டு பொய்கூறினார். விஷ்ணு அடியைக் காணமுடியவில்லை எனக் கூறினார். பொய் கூறியதால் பிரம்மாவுக்குத் தனிக் கோவில் இருக்கக் கூடாது எனவும், தாழம்பூ பூசைக்குப் பாவிக்கப்படக் கூடாது எனவும் இறைவன் கட்டளையிட்டார். இருவரும் தங்கள் தவறை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கோரிநின்றனர். இருவரினதும் ஆணவம் நீங்கியதால் ஜோதிவடிவாக நின்ற இறைவன் சுருங்கி லிங்கவடிவாக அவர்களுக்குக் காட்சிகொடுத்து அருளினார். அத்தினமே மகாசிவராத்திரி என அனுட்டிக்கப் படுகின்றது.

நீள் ஒளியாகிய அக்கினித் தம்பம் குழிர்ந்து அருணாசலம் என்னும் மலையாக மாறியது. (ஒளி - அருண், நிலைபெற்றது - அசலம், அருண + அசலம் = அருணாசலம்) இதுவே இப்பொழுது திருவண்ணாமலை என அழைக்கப்படுகின்றது. தீப்பிழம்பு ஒடுங்கிக் குளிர்ந்து சிவலிங்கமாக இருப்பதே சிதம்பரத்தில் காணப்படும் "லிங்கோற்பவர்" (லிங்கம் - ஒளிர்வு) ஆவார். சிவாலயங்களில் கருவறைப் புறச்சுவரில் லிங்கோற்பவர் காணப்படுவர்.

இக்கதையின் மூலம் நாம் கற்கும் பாடம். 1.எவ்வளவு பலசாலியாக இருந்தாலும் வன்முறையை (போரை) தவிர்த்துப் பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொண்டால் அழிவுகளைத் தவிர்க்கலாம். 2. ஆணவம் தலை தூக்கினால் அறிவு மழுங்கி விடும். 3. ஆணவத்தை அகற்றினால் இறைவனை அடையலாம்.

தற்கால விஞ்ஞானரீதியாகப் பார்க்கும் பொழுது

1." BIG BANG " Theory உடன் இந்த நிகழ்ச்சி உடன்படுகிறது.

2. சூரியனில் இருந்து சிதறிய துகள் குளிர்ந்து பூமியானது என்னும் விஞ்ஞான ஆய்வை உறுதிப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் (12.திருச்சாழல்-260) இந்நிகழ்வை

"அலரவனும் மாலவனும் அறியாமே அழல் உரு ஆய்
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றதுதான் ஏன்ஏடீ
நிலம் முதல் கீழ் அண்டம் உற நின்றிலனேல் இருவரும் தம்
சலம் முகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ."

எனப் பாடியுள்ளார்.

திருமூல நாயனார் திருமந்திரத்தில் (372 ஆம் பாடல்) இந்நிகழ்வை

"பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே".எனப் பாடியுள்ளார்.

மகாசிவராத்திரியைப் பற்றிப் பின் வரும் கதைகளும் கூறப்படுகின்றன. 2.மகாபிரளயத்தின் பின்னர் உலகம் முழுவதும் சிவத்தில் அடங்கியதால் சக்தி இறைவனை வழிபட்டு உயிர்களையும், உலகையும் (அண்டசராசரங்கள் அனைத்தையும் ) திரும்பத் தோற்றுவித்த இரவு.

3.வாசுகிப் பாம்பை கயிறாகக் கொண்டு பாற்கடலை கடைந்த போது பாம்பு கக்கிய நஞ்சை இறைவன் அருந்தி (நீலகண்டராகி) தேவரைக் காத்த நாள்.

4.மார்க்கண்டேயரின் உயிரைக் காக்க எமனைக் காலால் உதைத்த சிவனிடம் தேவர்கள் வேண்டி எமனை உயிர்ப்பித்த நாள்.

5.பார்வதிதேவி விளையாட்டாகச் சிவனின் கண்களை தனது கைகளால் மூடிய பொழுது அண்டசராசரம் முழுக்க இருண்டுவிட்டது. இப்பாவத்தைப் போக்க தேவியாரால் விரதம் இருந்து வழிபட்ட வழிபாட்டை ஏற்று ஒளியை வழங்கி அண்டசராசரங்களையும் இயங்க வைத்த நாள்.

6.பிருங்கி முனிவர் சக்தியை வணங்காது சிவனை மட்டும் வணங்கியதால் கோபம் கொண்ட சக்தி பூலோகம் சென்ற பின் இறைவனை அடையத் தவம் செய்த போது இறைவன் தன்னில் பாதியைச் சக்திக்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி கொடுத்த நாள்.7.அர்ஜுணன் கடும் தவமிருந்து இறைவனிடம் பாசுபதாஸ்த்திரம் பெற்ற நாள் 8.பகீரதன் கடும் தவமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையைப் பூமிக்கு வரவழைத்த நாள். 9.கண்ணப்ப நாயனார் இறைவனுக்கு தனது கண்களைக் கொடுத்த நாள்10.மதுரையில் அரசனின் வேண்டுதலுக்கு நடராஜர் கால் மாறி ஆடியநாள். 11.ஒரு காட்டில் புலியால் துரத்தப் பட்ட வேடன் ஒருவன் அதனிடம் இருந்து தப்புவதற்காக மரத்தில் ஏறித் தப்ப முயன்றான். இரவாகியும் புலி மரத்தடியிலேயே நின்றதால் வேடன் தான் நித்திரை கொண்டால் தவறி விழுந்து புலிக்கு இரையாகும் வாய்ப்பு இருப்பதை எண்ணி நித்திரை கொள்ளாமல் இருப்பதற்காக இரவு முழுவதும் மரத்தில் இருந்து இலைகளைப் பிடுங்கிக் கீழே போட்டவாறு இருந்தான். காலையில் புலி சென்றுவிட்டது. அன்று இரவு சிவராத்திரியாகும். அவன் ஏறிய மரம் வில்வ மரமாகும். அவன் பிடுங்கிப் போட்ட வில்வ இலைகள் கீழே இருந்த சிவலிங்கத்தின் மேல் விழுந்தன. இவ்வாறு தன்னை அறியாமல் உண்ணாது உறங்காது சிவராத்திரி விரதத்தையும், சிவலிங்க பூசையையும் செய்த புண்ணியத்தைப் பெற்ற வேடன் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்றான். இவ் அற்புதம் நடைபெற்ற இடம் திருவைகாவூர் என்னும் திருத்தலமாகும்.

## விநாயக சதுர்த்தி

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா"

என விநாயகரைப் பற்றி ஔவையார் பாடியுள்ளார்.

சதுர்த்தி என்பது சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு மாசமும் அமாவாசையிலிருந்து (சுக்கில பட்சம்) நான்காவது நாளும், பூரணையிலிருந்து (கிருஸ்ண பட்சம்) நான்காவது நாளுமாக இரண்டு முறை சதுர்த்தித் திதி வரும். சதுர் என்னும் சொல் நான்கு எனப் பொருள்படும். சுக்கில பட்சச் சதுர்த்தியை **சதுர்த்தி விரதம்** எனவும், ஆவணி மாதத்தில் வரும் சுக்கில பட்சச் சதுர்த்தியை **விநாயக சதுர்த்தி** எனவும், கிருஸ்ண பட்சத்தில் வரும் சதுர்த்தியை **சங்கடஹர சதுர்த்தி** எனவும், ஆவணிமாதத்தில் வருகின்ற கிருஸ்ண பட்சச் சதுர்த்தியை **சங்கடஹர விநாயக சதுர்த்தி** எனவும் கைக்கொள்கின்றனர். இவற்றுள் ஆவணி மாதத்தில் வரும் விநாயக சதுர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேடமானது. இவ்விரதத்தை இந்துக்கள் எல்லோரும் விநாயகருக்கான சிறந்த விரதமாக அனுஸ்டிக்கின்றனர்.

சிவம் என்னும் பரம்பொருள் ஆன்மாக்களுக்கு (உயிர்களுக்கு) அருள்புரிவதற்காக பல் வேறு வடிவங்கள் எடுத்துள்ளார் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாகும். இதை சேக்கிழார் "கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி அற்புதக் கோலம் நீடி" எனவும், திருவுந்தியாரில் "அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள் சகளமாய் வந்தென்று உந்தீபற, தானாகத் தந்ததென்று உந்தீபற" எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வகையில் சிவம் விநாயகராக வடிவம் தாங்கிய நாளே விநாயக சதுர்த்தி.

விநாயகரின் தோற்றத்தைப் பற்றி பல கதைகள் இருந்தாலும் கந்தபுராணத்தில் கயமுகாசுரன் சிவனிடம் பெற்ற வரத்தால் ஆணவம் மேலிட்டு தேவர்கள் உட்பட ஜீவராசிகளைத் துன்புறுத்தினான். தேவர்கள் சிவனிடம் தம்மைக் காப்பாற்றுமாறு வேண்ட சிவனும் தம்மிலிருந்து விநாயகரைத் தோற்றுவித்து அசுரனை அழித்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் வினாயகர் எப்படித் தோன்றினார் என்பதை கந்தபுராணம் அடியவர்களின் வேண்டுதலை ஏற்று பரமசிவனும், பார்வதி தேவியும் ஒரு சோலைக்குள் உள்ள சித்திர மண்டபத்துள் சென்று அங்கிருந்த "ஓம்" என்ற பிரணவத்தை நோக்க, அது ஆண், பெண் என இரண்டு யானைகளாக உருவெடுத்தன. இவற்றின் சேர்க்கையால் விநாயகப் பெருமான் தோன்றினார் அதாவது **பிரணவமந்திர வடிவமே விநாயகர்** எனக் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தையே திருஞானசம்பந்தப்பெருமான்

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

என்னும் பாடல்மூலம் கூறியுள்ளார்.

விநாயகர் பற்றிய வேறு சில கதைகளைப் பார்ப்போமானால்
சிவன் விநாயகரை கணங்களின் தலைவனாக (கணபதி) நியமித்தார்.
விநாயகருக்கு அனிமா, மகிமா ஆகிய அஷ்ட சித்திகளை மனைவியராக பிரம்மா கொடுத்தார்.

சிவனின் சொற்கேளாது தக்கன் யாகத்திற்குச் சென்ற தாட்சாயினி (பார்வதி தேவி) அங்கு ஏற்பட்ட அவமானம் தாங்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாககுண்டத்தில் குதித்து உயிர் துறந்தார். பின்பு பர்வதராஜனுக்கு பார்வதி என்னும் பெயருடன் மகளாகப் பிறந்து சிவனை அடைவதற்காக மண்ணால் ஒரு விநாயகர் விக்கிரகத்தை உருவாக்கி, ஆவணி மாத அமாவாசைக்கு அடுத்த சதுர்த்தியில் பூஜை ஆரம்பித்து பௌர்ணமிக்கு அடுத்த சதுர்த்தி வரை பூசை செய்து முடிவில் விக்கிரகத்தை நதியில் இறக்கி விட்டதன் பலனாக சிவனைத் திரும்பவும் அடைந்தார்.

இந்நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டே இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகமெங்கும் விநாயக சதுர்த்தியின் போது மண்ணால் செய்யப்பட்ட விநாயக விக்கிரகங்களை வீடுகளிலும், ஆலயங்களிலும் வைத்துப் பூசைகள் செய்து, விநாயகருக்குப் பிடித்த மோதகம், கொளுக்கட்டை, அப்பம், பொரி உட்பட வித விதமான பலகாரங்கள் மற்றும் பழங்கள் எல்லாம் படைத்து, பூசை முடிந்தபின் விக்கிரகங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று கடல், ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் விடுகின்றனர்.

# நவராத்திரி

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர் கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும் தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே! ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி! அருள்வாமி அபிராமி யே!

நவராத்திரி புரட்டாதி மாதம் சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் நவமிவரை ஒன்பது நாட்களுக்குக் கடைப்பிடிக்கும் விரதமாகும். இவ்விரதம் முறையே வீரம், செல்வம், கல்வி என்பனவற்றிற்கு அதிபதிகளான, சக்தியின் அம்சங்களான துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரை மூன்று, மூன்று நாட்களாக ஒன்பதுநாள் வணங்குவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. சக்தியின் விரதங்களுக்குள் சிறந்ததாகக் கருதப்படும் இவ்விரதம் பற்றி ஸ்கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்விரத ஆரம்பத்திலிருந்து ஆலயத்தில் மட்டுமல்லாமல் வீடுகளிலும் கொலு வைத்து, கும்பம் வைத்து, கும்பத்தைச் சுற்றி நவதானியங்களைப் போட்டு முளைக்க விடுவர். கொலு 3, 5, 7, 9 என படிக்கட்டுகள் அமைத்து அதில் வித விதமான பொம்மைகள் வைக்கப்படும். ஒன்பது நாட்களும் ஒவ்வொருநாளும் வித விதமான பலகாரங்கள் செய்து வைத்துப் பூசைகள் நடைபெறும். இந்த நாட்களில் சுமங்கலிப் பெண்களையும், கன்னிப்பெண்களையும் வீட்டிற்கு அழைத்து அவர்களைப் பராசக்தியாகப் பாவித்து கொலுவின் அருகில் அமரச் செய்து வணங்கி மஞ்சள், குங்குமம், தாம்பூலம், பட்டு நாணயம் என்பனவற்றை வழங்குவர்.

ஒன்பதாவதுநாள் சரஸ்வதி பூசை அல்லது ஆயுதபூசை என அழைக்கப்படும். அன்று புத்தகங்கள், கலைப்பொருட்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் என்பவற்றை பூசையில் வைத்து வணங்குவர். பத்தாவது நாள் விஜயதசமி அன்று ஆலயங்களில் மகிஷாசுர வதம் (வாழை வெட்டு ) அதாவது தேவி மகிஷாசுரனை வதம் செய்யும் நிகழ்ச்சி நடாத்திக் காண்பிக்கப்படுகிறது. பல ஆலயங்களில் மகிஷாசுரனுக்குப் பதிலாக வாழைமரத்தை வெட்டும் நிகழ்ச்சி நடாத்திக் காண்பிக்கப்படுகிறது. விஜயதசமி அன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்ச்சி அதாவது பிள்ளைகளுக்கு முதன் முதலாக எழுத்து அறிவிக்கும் நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன.

புராணத்தில் எருமைத் தலையுடைய மகிஷன் என்னும் அரக்கன் பல ஆண்டுகள் தவமிருந்து பிரம்மதேவரிடம் "தனக்கு யாராலும் மரணம் நேரக்கூடாது, அப்படி நேர்ந்தால் ஒரு பெண்ணால்தான் நேரவேண்டும்" என்ற வரத்தைப் பெற்றிருந்தான். காலப்போக்கில் மகிஷன் ஆணவம் தலைமேல் ஏறி தேவலோகத்தையே கைப்பற்ற முயன்றான். தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட அவரால் முடியாது எனவுணர்ந்த விஷ்ணு சிவனிடம் வேண்ட சிவன் "சந்தியாதேவி" என்னும் சக்தியை உருவாக்கினார். சக்தி ஒன்பது நாள் போர்செய்து பத்தாம் நாள் மகிஷனை வதைத்ததால் "மகிஷாசுரமர்த்தினி" எனப் பெயர் பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்களில் எல்லோராலும் பாடப்படும் குமரகுருபர சுவாமிகள் பாடிய

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே.

## கேதாரகௌரி விரதம்

கேதாரகௌரி விரதம் என்பது சிவபெருமானுக்குரிய விரதங்களுள் ஒன்றாகும். இவ்விரதம் புரட்டாதி மாதம் சுக்கில பட்ச தசமியில் ஆரம்பித்து இருபத்தி ஒருநாள் அனுஸ்டிக்கப்படுகிறது. கேதாரம் என்பது இமயமலைசாரலில் உள்ள வயல் பகுதியான ஒரு சிவ ஸ்தலமாகும். இங்கு சுயம்பு லிங்கமாக தோன்றிய சிவனை (கேதாரேஸ்வரரை) பார்வதி தேவி (கௌரி அம்பாள்) இருபத்தி ஒருநாள் விரதமிருந்து வழிபட்டு அர்த்தநாரியாகவும், அர்த்தநாரீசுவராகவும் இருவரும் ஒன்றுபட்ட தினமே கேதாரகௌரி விரத இறுதி நாளாகும். இவ்விரதம் கேதாரேஸ்வரி விரதம் எனவும் அழைக்கப்படுகின்றது. பொதுவாக கன்னிப் பெண்கள் நல்ல கணவரை வேண்டியும், சுமங்கலிகள் கணவருடன் இணைபிரியாது இருக்கவும் இவ்விரதத்தை அனுஸ்டிப்பர். ஆண்களும் இவ்விரதத்தை அனுஸ்டிக்கலாம். பார்வதி தேவியே இவ்விரதத்தை அனுஸ்டித்து சிவனின் இடப்பாகத்தைப் பெற்றபடியால் சிவ விரதங்களில் இது முதன்மை பெறுகின்றது. இவ்விரதம் பற்றி புராணத்தில் பின்வரும் கதை கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொருகாலத்தில் கைலைமலையில் தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் புடைசூழ சிவன் பார்வதி தேவியோடு வீற்றிருந்தார். அப்பொழுது பிருங்கி மகரிசி (முனிவர்) விகட நடனமாடிச் சபையோரை மகிழ்வித்ததால் சிவனும் ஏனையோரும் அவரைப் பாராட்டினார்கள். இறுதியில் பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் உட்பட்ட சபையில் இருந்த அனைவரும் சிவன் பார்வதியை மூன்று முறை வலம் வந்து வணங்கிச் சென்றனர். ஆனால் பிருங்கி முனிவர் மட்டும் வண்டாக மாறி அம்பிகையைத் தவிர்த்து சிவனை மட்டும் மூன்று முறை வலம் வந்து வணங்கினார். பிருங்கி முனிவரின் இச்செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க பரமேஸ்வரன் பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல. மாறாக மோட்சத்தை நாடுபவர். இதனால் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தைத் தரும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை எனக் கூறினார். இதனால் மேலும் கோபமுற்ற பார்வதிதேவி எனது சக்தி இல்லாமல் பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது எனக் கூறி, "நிற்க முடியாமல் போகக் கடவாய்" என முனிவருக்குச் சாபம் கொடுத்தார். இதனால் சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடி நிலத்தில் விழப் போனார். அப்போது சிவன் "பக்தனைக் காப்பது என் தர்மம்" எனக்கூறி முனிவரின் கையில் ஒரு ஊன்றுகோலைக் கொடுத்தார். இதனால் சக்தி பெற்ற முனிவர் மீண்டும் சிவனை மட்டும் வணங்கி விட்டு தனது ஆச்சிரமத்திற்கு போனார்.

இதனால் முனிவர் மட்டும் அல்லாமல் சிவனும் தன்னை மற்றவர்கள் முன்பு அவமதித்துவிட்டார் எனக் கோபமுற்று சிவனுடன் இனிச் சேர்ந்து வாழ்வதில்லை எனக் கூறி கைலையை விட்டு நீங்கி பூலோகத்திற்கு வந்துவிட்டார். இங்கு கௌதம முனிவரின் ஆச்சிரமத்தில் உள்ள ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருந்தார். முனிவர் ஆச்சிரமத்தை அண்டியுள்ள பகுதியில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்து தனது ஞானக் கண்ணால் வந்திருப்பது பரமேஸ்வரி என உணர்ந்தார். முனிவர் தேவியை அர்ச்சித்து பூஜை செய்து "இங்கு தாங்கள் வந்த காரணம் என்ன" எனத் தேவியைக் கேட்டார். தேவியும் தான் சிவனின் பாதி உடம்பைப் பெற வேண்டும் என முனிவரிடம் கூறினாள். முனிவரும் கேதாரேஸ்வர விரதத்தை அனுஸ்டிக்கும் முறையை அம்பிகைக்கு விளக்கினார். முனிவரின் கூற்றுப்படி அம்பிகை இருபத்தொரு நாள் சிவனைப் பூஜித்து சிவனின் பாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலைப் பெற்று அர்த்தநாரீஸ்வரன் என்று எல்லோரும் போற்றும்படி சிவனின் இடப் பாகத்தில் அமர்ந்து எமக்கு அருள் புரிகின்றார்.

## கௌரிக் காப்புப் பாடல்

## காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெலாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனத்துடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



சிவ வடிவம் - உமாமகேஸ்வர மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிங்காஷ்டகம்

(விரதத்தின் போது படிக்கவேண்டியது)

நான்முகன் திருமால் பூசைசெய் லிங்கம்
தூயசொல் புகழ்பெரும் பேரெழில் லிங்கம்
பிறவிப் பெருந்துயர் போக்கிடும் லிங்கம்

வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
காமனை எரித்த பேரருள் லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
வழிவழி முனிவர்கள் வழிபடும் லிங்கம்

வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்
திவ்யமனம் பல கமழ்கின்ற லிங்கம்
சித்தம் தெளிவிக்கும் சித்தர்கள் லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

படம் எடுத்தாடும் பாம்பணி லிங்கம்
கனகமின் நவமணிகள் ஒளித்திடும் லிங்கம்
தட்சனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணக்கம் ஏற்ற சதாசிவ லிங்கம்

# தீபாவளி

தீபாவளி இந்துசமயத்தவரால் கொண்டாடப்படும் பட்டிகைகளில் ஒன்றாகும். தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை. வீடுகளில் உள்ள இருளை அகற்ற வரிசையாக விளக்கேற்றுதல் என்பது பொருளாகும். எமது மனதில் உள்ள இருளாகிய அக்கங்காரம், கோபம், பொறாமை போன்ற தீய எண்ணங்களை எரித்துவிட்டு அன்பு, கனிவு, நல்ல சிந்தனை போன்ற நல்ல எண்ணங்களாகிய ஒளியை ஏற்றுதல் என்பது இதன் பொருளாகும். தீபாவளியன்று ஏற்றும் தீபம் "யமனை விரட்டும் யமதீபம்" என்று வாமண புராணம் கூறுகிறது.

சைவ ஆகமங்கள் இப்பண்டிகையை **நரக சதுர்த்தசி** எனக் குறிப்பிடுகின்றன. இச்சொல் பிற்காலத்தில் மறக்கப்பட்டு தீபாவளி என அழைக்கப்பட்டு வருகின்றது. இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் சூரிய உதயத்திற்கு முன்பாக வரும் சதுர்த்ததி திதியில் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் ஆகம முறைப்படி சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் மற்றும் மடாலயங்களில் அதிகாலையிலேயே மூர்த்தங்களுக்கு எண்ணை ஸ்நானமும், புத்தாடையும் அணியப்பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன. சைவ மக்களும் காலையில் எழுந்தவுடன் எண்ணை தேய்த்து முழுகிப் புத்தாடை அணிந்து ஆலயம் சென்று இறைவனை வணங்கிய பின் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். சாதாரணமாக சூரிய உதயத்திற்கு முன் எண்ணை தேய்த்துக் குளிக்கக் கூடாது. ஆனால் தீபாவளியில் அன்று சூரிய உதயத்திற்கு முன் எண்ணை தேய்த்துக் குளித்தால் புண்ணியம் எனக்கூறப்படுகின்றது. நரக சதுர்த்தசி என்னும் நான்காம் சாமத்தில் தைலத்தில் இலக்குமியும், நீரில் கங்கையும் இருப்பதாக ஐதீகம். தீபாவளி நாளில் மக்கள் ஒருவருக்கொருவர் பலகாரங்களை பரிமாறி, உறவினர்கள் ஒன்று சேர்ந்து உணவருந்தி மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள். குறிப்பாக சிறார்கள் பட்டாசு வெடித்து, உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று பலகாரம், உணவருந்தி இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள். இலங்கையிலும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நண்பர்கள், உறவினர்கள் சேர்ந்து மது அருந்தி ஆட்டு மாமிச உணவை உண்டு மகிழ்ச்சியாகக் கொண்டாடுவார்கள். இயந்திரமயமான இக்காலத்தில் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருக்க இந்நாள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தீபாவளி கொண்டாடுவதற்கான காரணங்கள் புராணங்களிலும், கதைகளாகவும் பல கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போமானால்

1. சைவ சமயத்தவர்கள் சிவனால் பல்வேறு காலங்களில் பல்வேறு நோக்கங்களுக்காக எடுக்கப்பட்ட 25 சிவ மூர்த்தங்களில் ஒன்றான கஜமுகானுக்கிரக மூர்த்தியின் தோற்றம் நடந்த நாளை (நரக சதுர்த்தசி) தீபாவளி எனக் கொண்டாடுகிறார்கள்.

2. சக்தி தனது 21 நாள் கேதாரகௌரி விரதத்தை முடித்த பின்பு சிவன் சக்தியை தனது இடப்பாகத்தில் ஏற்று அர்த்தநாரீஸ்வரராக மாறிய நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது என ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

3. திருப்பாற்கடலில் அமிர்தம் பெறுவதற்கு கடைந்தபொழுது இலட்சுமிதேவி தோன்றிய நாள், திருமாலை இலட்சுமிதேவி திருமணம் செய்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கிருஷ்ணபரமாத்மா நரகாசுரனை அழித்த நாளை மக்கள் கொண்டாட வேண்டும் என்ற அவனின் வேண்டுகோளுக்கமைய அந்நாள் தீபாவளி எனக் கொண்டாடப்படுகின்றது என பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ளது

5. இராமபிரான் 14 ஆண்டுகள் வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்பிய அன்று மக்கள் வீடுகளில் தீபம் ஏற்றி அவரை வரவேற்ற நாள் தீபாவளியாகவும், வட இந்தியாவில் புதுவருடப் பிறப்பாகவும் கொண்டாடுகின்றனர். ஆனால் வான்மீகி இராமாயணம் யுத்த காண்டம் 127 ஆம் சர்க்கத்தில் இராமர் நாட்டிற்குத் திரும்பியது சித்திரை மாசத்து வளர்பிறை சஷ்டி நாள் என்றும், அடுத்த நாளான சத்தமியில் முடி சூடினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. பாண்டவர் வனவாசம் முடிந்து பாரத யுத்தத்தில் வெற்றி பெற்று அத்தினாபுரம் மீண்ட நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

7. சந்திரகுப்த விக்கிரமாதித்த மகாராஜா முடி சூடிய நாளை தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

8. சமண சமயத்தின் கடைசி தீர்த்தங்கரர் பரிநிர்வாணம் அடைந்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

9. ஜைனர்களின் குருவான மகாவீரர் வீடுபேறு அடைந்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

10. சீக்கிய மதத்தை ஸ்தாபித்த குருநானக் வீடுபேறு அடைந்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

11. ஆரிய சமாஜத்தை தோற்றுவித்த தயானந்த சரஸ்வதி வீடுபேறு அடைந்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகின்றது.

12. ஆதிசங்கரர் ஞானபீடங்களை ஸ்தாபித்தது ஒரு தீபாவளி தினத்திலாகும்.

13. சீக்கியர்களின் கடைசி குருவான குரு கோவிந்த சிங் அவுரங்கசீப் மன்னனுடைய சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டது ஒரு தீபாவளி தினத்திலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இதேபோல் இதற்கு முந்திய சீக்கிய குருவான ஹார்கோபிந்த் சிங் ஜஹாங்கீர் மன்னனுடைய சிறையில் இருந்து விடுபட்ட நாள் கி.பி. 1619 ஆண்டின் தீபாவளி தினத்திலாகும்.

15. இந்தியாவில் அமிர்தசரஸில் பொற்கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது கி.பி. 1577 ஆண்டின் தீபாவளி தினத்திலாகும். அன்று பொற்கோவில் விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

16. தீபாவளிக்கு பட்டாசு வெடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியவர் பாபர்.

17. அக்பர் தீபாவளிக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டதாக அவரின் அவைக்களப் புலவர் அபூல் பாஸல் தனது "அயினி அக்பர்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

18. வங்காளத்தில் தீபாவளியன்று காளி பூசை செய்து வழிபடுகின்றனர். அத்துடன் இளம் பெண்கள் தீபம் ஏற்றி ஆற்றில் விடுவார்கள்.

19. காசியில் வருடத்தில் தீபாவளியை ஒட்டி மூன்று நாட்கள் மட்டும் தங்க அன்னபூரணி தரிசனம் கிடைக்கும்.

20. நேபாளத்தில் ஐந்து நாட்கள் இரவில் தீபம் ஏற்றி "தீஹார்" எனத் தீபாவளி கொண்டாடப்படுகின்றது

21. தீபாவளியை அரசுப்பண்டிகை ஆக்கியவர்கள் அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான் ஆகிய மொகலாயச் சக்கரவர்த்திகள் எனக் கூறப்படுகிறது.

22. வடநாட்டிலும் கிழக்காசியாவிலும் சிலர் தீபாவளிக்கு முதல் நாள் இலக்சுமி பூசையும், தீபாவளியன்று குபேர பூசையும் செய்து வழிவடுவார்கள்.

23. இந்தியாவில் பௌத்தர்களும், கிறீஸ்தவர்களும் தீபாவளியைக் கொண்டாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி

கந்த சஷ்டி அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞானமாகிய பரம்பொருளை அடைவதற்காக சைவ சமயத்தவர்களால் அனுஷ்டிக்கப்படும் முருகனுக்குரிய முக்கிய விரதங்களில் ஒன்றாகும். ஐப்பசி மாத அமாவாசையின் பின் வளர்பிறை பிரதமை முதல் ஆரம்பித்து சஷ்டி திதி வரையான ஆறு தினங்களுக்கு இவ் விரதம் அனுஸ்டிக்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை மட்டுமின்றி காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம் தற்பெருமை ஆகியவைகளை அழித்து நற்குணங்களை நிலைநாட்டுவதால் "ஒப்பரும் விரதம்" என கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. உண்ணாநோன்பு உடலுக்கு மட்டுமன்றி ஆன்மாவுக்கும் நல்லது. இதனாலேயே எல்லாச் சமயங்களிலும் உண்ணாநோன்பு கடைப்பிடிக்கப் படுகின்றது.

கந்தபுராணத்தில் முருகன் ஆனைமுகச்சூரன், சிங்கமுகச்சூரன், சூரபதுமன் ஆகிய மூவரையும் வெல்வது சைவசித்தாந்தத்தில் கூறப்படும் ஆன்மாவை பிடித்துள்ள மூன்று மலங்களான மாயை, கன்மம், ஆணவம் என்பதை ஒழிப்பதாகும். உண்ணா நோன்பு இருக்க ஆணவம் அடங்கி ஆன்மா இறைவனுடன் ஒன்றுபடும். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கந்த சஷ்டித் திருவிழா. கந்த சஷ்டி நாட்களில் சைவ ஆலயங்களில் குறிப்பாக முருகன் ஆலயங்களில் கச்சியப்ப சிவாச்சாரியாரினால் பாடப்பட்ட கந்த புராணத்தைப் படித்து அதன் பொருளையும் கூறுவார்கள்.

கந்தசஷ்டி நோன்பு பற்றிய புராண வரலாற்றைப் பார்ப்போமானால், பிரமாவின் இரு புதல்வர்களான தக்கனும், காசிபனும் கடும் தவம் புரிந்து சிவனிடம் பல வரங்களைப் பெற்றிருந்தனர். காசிபன் அசுரர்களின் குருவாகிய சுக்கிரனால் ஏவப்பட்ட மாயை என்னும் அசுரப் பெண்ணிடம் மயங்கி, தான் பெற்ற தவ வலிமையை இழந்து, அவளுடன் சேர்ந்து சூரன், சிங்கன், தாரகன், அசமுகி (பெண்) ஆகியவர்களை பெற்றனர். இந் நால்வரும் வரங்களைக் கேட்டு சிவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்தனர். சிவனும் "என் சக்தியைத் தவிர வேறு ஒருசக்தியாலும் உங்களை அழிக்க முடியாது" என வரம் கொடுத்தார். இதனால் ஆணவமிகுதியால் சூரன் முதலானோர் இந்திரன் உட்பட தேவர்கள் எல்லோரையும் சிறையில் அடைத்து அதர்ம வழியில் ஆட்சி நடத்தினர். இக்கொடுமையை தாங்கமுடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் சிவனிடம் முறையிட்டார்கள். சூரன் முதலானோரை அழிக்க சிவன் தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப் பொறிகள் மூலம் ஆறுகுழந்தைகளை உருவாக்கினார் .இந்த ஆறு குழந்தைகளையும் பார்வதிதேவி ஒன்றாகச் சேர்த்து ஆறுமுகசுவாமியை உருவாக்கினார். ஆறுமுகசுவாமி சூரன் முதலானோரை அழித்து தேவர்களைக் காப்பாற்றினார். முருகப்பெருமான் சூரபத்மாதியரை அழிக்க நடத்திய திருவிளையாடலையே நாம் கந்தசஷ்டி விழாவாகக் கொண்டாடுகிறோம்.

## கந்த சஷ்டி கவசம்

முருகனின் ஆறுபடை வீடுகளான 1.திருப்பரம்குன்றம், 2.திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), 3.பழனி (திருவாவினன்குடி), 4. சுவாமிமலை (திருவேரகம்), 5.திருத்தணிகை, 6.பழமுதிர்சோலை. ஆகிய ஆறு தலங்களுக்கும் தனித் தனியாக பாலன் தேவராய சுவாமிகளால் அருளப்பட்ட கந்த சஷ்டி கவசம் உள்ளது. கந்தசஷ்டி விரத நாட்களில் பொதுவாக கீழ் தரப்பட்ட திருச்செந்தூர் முருகன் மேல் பாடிய கந்த சஷ்டி கவசத்தையே பலரும் படிக்கின்றனர். சிலர் ஆறுநாட்கள் விரதமாகையால் ஒருநாளைக்கு ஒன்றாக ஆறு கவசங்களையும் படிக்கின்றனர்

### திருச்செந்தூர் முருகன்மேல் பாடிய கந்த சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தசஷ்டி கவசம்தனை
அமரரிடர்தீர அமரம்புரிந்த குமரனடி நெஞ்சே குறி.
சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக

ரவண பவச ர ர ர ர ர ர ர
ரிவண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென

வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோ தனென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிடண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க

முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும். குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்

கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்

சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!

தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!

கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

## கார்த்திகை விளக்கீடு

கார்த்திகை விளக்கீடு கார்த்திகைத் தீபம் எனவும் அழைக்கப்படுகின்றது. இத் திருநாள் கார்த்திகை மாத பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாளில் இந்துக்களால் ஆலயங்களிலும், வீடுகளிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடும் தீபத் திருநாளாகும். இத்திருநாளை 1. குமாராலயதீபம் (முருகன் ஆலயங்களில் பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிவரும் நாளிலும்) 2. விஷ்ணுவாலய தீபம் (விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது) 3. சர்வாலய தீபம் (எல்லா இந்து ஆலயங்களிலும் , வீடுகளிலும்) என மூன்று நாட்கள் கொண்டாடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் வீடுகளிலும், தொழில் செய்யும் இடங்களிலும் வெளியில் வாழைமரக் குற்றியில் தேங்காய்ப் பாதிக்குள் எண்ணை நனைத்த துணியை பொட்டலமாகக் கட்டியும், மற்ற இடங்களில் தடிகளில் துணியால் பந்தங்கள் செய்து எண்ணையில் நனைத்தும், ஆலயங்களுக்குள்ளும், வீட்டு முற்றத்திலும், வீட்டிற்குள் எல்லா இடங்களிலும் சுட்டி விளக்குகளால் ஆலயங்களையும், வீடுகளையும் அழகுபடுத்தித் தீபங்களை ஏற்றுவார்கள். ஆலயங்களின் முன்பாக "**சொக்கப்பனை**" கட்டி, அதாவது வாழை மரம் நட்டு அதைச் சுற்றி கூம்பு வடிவாக தென்னம் ஓலைகளால் அடைத்து அதற்குத் தீ மூட்டி சோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்வார்கள். இக்காட்சி சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றியதை நினைவு கூரும் முகமாக நடாத்தப்படுகின்றது.

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும் நானே பெரியவன் என வாதாடியபொழுது சிவபெருமான் தனது அடியையும், முடியையும் தேடுமாறு கூறி சோதிப் பிழம்பாகத் தோன்றினார். அடி, முடியைக் காணமுடியாமல் இருவரும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என ஏற்றுக்கொண்டனர். தாம் கண்ட சோதிப் பிழம்பை எல்லோரும் காணும்படி காட்டியருளவேண்டும் என்ற அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமான் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தன்று சோதிப்பிளம்பைக் காட்டியருளினார். இத்தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை விளக்கீடு. இந்நிகழ்வு நடந்த இடம் தென்இந்தியாவிலுள்ள திருஅண்ணாமலை எனக் கூறப்படுகின்றது. அதனாலேயே திருஅண்ணாமலையில் தீபம் மிகவும் உணர்வுபூர்வமாக பிரமாண்டமாகக் கொண்டாடப்படுகின்றது. இதனால் இத்திருநாளைத் திருஅண்ணாமலைத் தீபம் எனவும் அழைப்பர்.

இந்தநாள் முருகப்பெருமான் அவதரித்த நாள் எனவும் கூறப்படுகின்றது.

இந்தநாள் சிவன் பார்வதிக்குத் தன் இடப்பாகத்தைக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் பெருங்கதை

பிள்ளையார் பெருங்கதை சைவசமய மக்களால் கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஸ்டித் திதிவரையுள்ள இருபத்தொரு நாட்கள் அனுஸ்டிக்கப்படும் விரதமாகும். இது விநாயக சஸ்டி விரதம், பிள்ளையார்கதை விரதம் எனவும் அழைக்கப்படும். இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களில் முக்கியமாக பிள்ளையார் ஆலயங்களில் இந்த இருபத்தொரு நாட்களும் வரதபண்டிதரின் பிள்ளையார் கதை படிக்கப்படும் வழக்கம் பலகாலமாக பேணப்பட்டு வருகின்றது.

ஔவயாரால் பாடப்பட்ட **விநாயகர் அகவல்**

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்அங்குச நிலையும் (து)
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்எனக்கருள் செய்து (து)
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்ஒன்றிடம் என்ன (கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தரும் ஆனந்தத்அழுத்தியென் செவியில் (து)
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்அணுவாய் (கு) அப்பாலுக்அப்பாலாய்க் (கு)
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

# திருவெம்பாவை

இந்துக்களால் மார்கழி மாத திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் திருவெம்பாவை விரதம் கடைப்பிடிக்கப்படுகின்றது. முற்காலத்தில் இவ்விரதத்தை கன்னிப் பெண்களே கூடுதலாகக் கடைப்பிடிப்பர் .இந்த நாட்களில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து தம் தோழியரையும் அழைத்துக் கொண்டு நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி அருகில் உள்ள சிவன் கோயிலுக்கு சென்று இறைவனைத் துதித்து வழிபடுவர். இந்நிகழ்ச்சியை வைத்தே மாணிக்கவாசகப் பெருமான் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடினார். இன்றைய நாட்களில் பொதுவாக எல்லாச் சைவ ஆலயங்களிலும் அதிகாலையில் திருவெம்பாவைப் பூசைகள் நடத்தப்பட்டு கீழே உள்ள திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றது. பத்தாம்நாள் திருவாதிரை அன்று சிவன் ஆலயங்களில் "ஆருத்திரா தரிசனம்" இடம்பெறும். இந்தப் பத்து நாட்களும் இலங்கையில் சைவசமயத்தவர்கள் வாழும் ஊர்களில் சிவ தொண்டர்கள் அதிகாலை எழுந்து வீதி வீதியாகச் சென்று சங்கு ஊதி, சேமக்கலம் அடித்து திருவெம்பாவைப் பாடல், திருப்பள்ளி எழுற்சிப் பாடல் மற்றைய திருமுறைப் பாடல்களையும் பாடி ஊர் மக்களை நித்திரையால் எழுப்பி ஆலயத்திற்கு அதிகாலைப் பூசைக்கு போவதற்கு ஊக்கப்படுத்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகசுவாமிகளால் திருஅண்ணாமலையில் பாடப்பட்ட **திருவெம்பாவை**

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போ(தும்) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர் உகந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய்.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போற் செய்யா
வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் .

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே

செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் .

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர்எம்பாவாய்.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.



சிவ வடிவம் : சுகாசன மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அர்த்தநாரீஸ்வரர் - லண்டன் முத்துமாரிஅம்மன் ஆலயம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சிவயோகம்

அறக்கட்டளை இலக்கம் 1050396

## இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon. CR0 3BF. Tel: 020 8767 9881



அம்பாள் அடியார்களே,

கடந்த 20 வருடங்களுக்கு மேல் வாடகை இடங்களில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டு இருந்த நமது அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் நம் அனைவரின் பிரார்த்தனையின் பலனாக நமக்கெல்லாம் வரம் தர நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான மிகப் பெரியதொரு நிரந்தரமான கோயில் **128, Aurelia Road, Croydon. CR0 3BF** என்ற முகவரியில் அமைய அருள்பாலித்துள்ளாள்.

நிரந்தரமான கோயில் மட்டுமல்லாமல் இந்து கலாச்சார மையமாக முதியோர்கள், இளையோர்கள் ஒன்றுகூடி உறவுகளை சந்தித்து உரையாட, தமிழ், இயல், இசை, நாடகம் வளர்க்க மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய இடம் அமைந்துள்ளது.

எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனின் திருவருள் துணை கொண்டு மேற்படி முகவரியில் தை மாதம் 24ம் நாள் (06-02-2017) திங்கட்கிழமை காலை முதல் பூஜைகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக!

இப்படிக்கு
சிவசக்தியின் பணியில்
சிவயோக அறக்கட்டளை அறங்காவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அர்த்தநாரீஸ்வரர்"
"இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலயம்"

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சிவயோகம்

## இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில்
128, Aurelia Road, Croydon. CR0 3BF. Tel: 020 8767 9881



அம்பாள் அடியார்களே,

கடந்த 20 வருடங்களுக்கு மேல் வாடகை இடங்களில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டு இருந்த நமது அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் நம் அனைவரின் பிரார்த்தனையின் பலனாக நமக்கெல்லாம் வரம் தர நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான மிகப் பெரியதொரு நிரந்தரமான கோயில் 128, Aurelia Road, Croydon. CR0 3BF என்ற முகவரியில் அமைய அருள்பாலித்துள்ளாள்.

நிரந்தரமான கோயில் மட்டுமல்லாமல் இந்து கலாச்சார மையமாக முதியோர்கள், இளையோர்கள் ஒன்றுகூடி உறவுகளை சந்தித்து உரையாட, தமிழ், இயல், இசை, நாடகம் வளர்க்க மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிகப் பெரிய இடம் அமைந்துள்ளது.

எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனின் திருவருள் துணை கொண்டு மேற்படி முகவரியில் தை மாதம் 24ம் நாள் (06-02-2017) திங்கட்கிழமை காலை முதல் பூஜைகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரும் வருக அம்பாள் அருள் பெறுக!

இப்படிக்கு
சிவசக்தியின் பணியில்
சிவயோக அறக்கட்டளை அறங்காவலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSR Printers, Jaffna. Mob: 0094 767687664